
www.padippakam.com

# கணையாழி

ழில் படைப்பிலக்கிய மாத இதழ்

வரி, 1993. விலை ரூ. 3.



படிப்பகம்

www.padippakam.com

உருவகம்:

## 'வேறுபாடு' என்.ஆர்.தாசன்

தெருவில் ஒரு வீட்டில் தீப்பிடித்துக் கொண்டது.
அந்த வீட்டில் உள்ளவர்களும்,
பக்கத்து வீட்டுக்காரர்களும்,
அவசர அவசரமாக சாமான்களை
அப்புறப்படுத்தினார்கள்.
அதில் ஒவ்வொருவரும் அவரவர் நிலைக்கேற்ப,
முன்னுரிமை தந்தனர்.
தான் சேகரித்து வைத்திருந்த பழம் நூல்களையும்,
தான் எழுதிய கவிதைகளையும்,
பாதுகாப்பதில் கவிஞர் முனைப்பு காட்டினார்.
வாத்தியக் கருவிகளைப் பாதுகாக்க சங்கீத வித்வான்
பரபரத்தார்.
கால் சலங்கைகளையும், விசேஷ உடுப்புகளையும்,
காப்பதில் நாட்டியக்காரியின் ஆர்வம் இருந்தது.
ஆனால், பெரும்பாலான ஆண்களும் பெண்களும்
நகைகளையும், பணத்தையும் பாதுகாப்பதில்
கவனமாய் இருந்தனர்.

ஞானச் சித்தர் என்றும்,
அரைக் கிறுக்கு என்றும்,
வெவ்வேறு விதமாக அழைக்கப்படும் ஒருவர்,
நெருப்பு ஜ்வாலைக்கு எதிரில் கை விரித்து,
மெய் சிலிர்க்கும் பரவசத்துடன் உரக்கச் சொன்னார்:
"ஹே, அக்னி தேவா!
உன்னை வணங்குகிறேன்.
வெளிக்கு ஒரே மாதிரியாகத் தெரியும் மனிதர்கள்
உள்ளே விதவிதமாய் வேறுபட்டுக் கிடக்கிறார்கள்
என்பதை அற்புதமாய்
நிரூபித்து விட்டாய் நீ!
ஹே, அக்னி தேவா!
உன்னை வணங்குகிறேன்."

படிப்பகம்

www.padippakam.com

# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

பிப்ரவரி, 1993

மாதத்தின் முதல் வாரத்தில் வெளி வருகிறது.

தனி இதழ் விலை ரூ. 3.
ஆண்டுச் சந்தா ரூ. 36.
*சந்தாவை* M.O *செய்க.*

மனித நேயம் வளர்க்கும் இலக்கியத் தெளிவின் ஊற்றுக்கண்.

---

*படைப்புகளை அனுப்ப மற்றும் தகவல் தொடர்புகளுக்கு:*

ஆசிரியர், கவிதாசரண்,
31, டி.கே.எஸ். நகர்
சென்னை–600 019.

---

திறனாய்வுக்குப் புதிய நூல்கள் மட்டுமே ஏற்கப்படுகின்றன.

*இதழை 580,* T.H.Road, *சென்னை-21 இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல் பிரஸ், 31,* T.K.S. *நகர், சென்னை-19 இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்*

படைப்பாளர்களே தங்கள் படைப்புகளுக்குப் பொறுப்பேற்கிறார்கள்.

வெளியிடுவதற்கு ஏற்கப்பட்டவற்றைத் திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை யுண்டு.



“

நம் எழுத்தாளர்கள் தங்கள் சுயத்தைச் சில்லறை தாகத்திலும் விளம்பர மோகத்திலும் கரைத்து விட்டார்களா?

இல்லையெனில், அயோத்தி விவகாரம் அவர்களை உருப்படியாய்ப் பாதிக்காததேன்?

கவிஞனின் மனத்துள் ஒரு கனல் இருக்க வேண்டும் என்பதையே மறந்துவிட்டார்களே.

பாரதிக்குப் பிறகு அந்தத் தார்மீகக் கனல் சாக்கடையில் விழுந்து தற்கொலை செய்து கொண்டுவிட்டதா?

இல்லையெனில், இக்கவிஞர்கள் சொல் கோர்க்கும் எந்திரமாக மாறிப்போவார்களா?

யாப்பிலிருந்து கட்டவிழ்த்துக்கொண்டதெல்லாம்வெறும் துடைப்பக் குச்சிகள் பொறுக்கத்தானா?

எழுத்தில் தன் சுயத்தைத் தரிசிக்காதவன், தன் எடையைச் சுமப்பதைத் தவிர வேறென்னத்தைச் சாதித்து விடப் போகிறான்?

”



படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

கவிதாசரண்
தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் இரண்டு பிப்ரவரி, 1993 இதழ் இரண்டு

# என் மதம்- ஒரு மறு பரிசீலனை

ஒரு இதிகாசத்தின் வீர சாகசங்கள் பற்றிய தத்துவ வியாக்கியானங்களெல்லாம், வரலாற்றுப் பார்வையில், கொற்றக் குடையில் விழுந்த பொத்தல்களாகச் சிறுத்துப் போகும் என்பதை, மதத்தின் பெயரால் ஒரு மாபெரும் தேசத்து மக்களைப் பொய் நம்பிக்கையில் மூழ்கடித்து,— ஊதல்காரனை நம்பிச் சென்ற எலிப்பட்டாளத்தைப் போல் கொல்லத் திட்டமிடும் மதமேதைகள் பரிசீலித்தால் நலம்.

அடுத்து, கீதைக்கு வித்திட்ட பாரதத்தைப் பார்ப்போம். அதிலும் இதே வகை சூழ்ச்சிகள்தான்.

அன்றைய சமுதாயத்தின் பல பரிமானங்களையும், மனித வளர்ச்சியையும் இராமாயணத்தைவிடவும் நன்றாகக் காட்டும் அற்புதக் காவியம்.

பாண்டவ புத்திரர்கள் ஐவரும் ஐந்து வெவ்வேறு தந்தையர்க்குப் பிறந்தவர்கள். இந்த வகையில் காந்தாரி வணக்கத்திற்குரிய பதிவிரதை; அவள் மூத்த மகன் துரியோதனனே பாண்டவர்களை இதைச் சொல்லித் தூஷிக்கிறான். இப்படியொரு தூஷனைக்குரிய வழியில்தான் திருதிராஷ்டிரனும் பாண்டுவும் கூடப் பிறந்தார்கள்.

பின்னர், கௌரவர் சபையில் வஞ்சினம் கூறும் பீமனும் திரௌபதியும் அன்றைய சமுதாய வளர்ச்சியை நன்றாகவே எடுத்துக் காட்டுகிறார்கள்.

பீமன் என்ன சொல்கிறான்?

தன் பகைவனின் நெஞ்சைப் பிளந்து 'இரத்தம் குடிப்பேன்' என்கிறான். அவ்வாறே குடிக்கவும் செய்கிறான்.

படிப்பகம்

www.padippakam.com



பட்ட மகிஷி திரௌபதி என்ன சொல்கிறாள்?

அந்த ரத்தத்தைக் கூந்தலில் நெய்யாகப் பூசிக் குளித்து, 'கூந்தல் முடிப்பேன்' என்கிறாள். அப்படியே செய்கிறாள்.

மிகவும் ஆக்ரோஷமான வஞ்சினம்தான் என்றாலும், அம் மக்கள் சிறிது காலத்திற்கு முன்வரை நரமாமிசப் பட்சினிகளாகத்தான் இருந்திருக்கிறார்கள் என அறியமுடிகிறது.

பாரதப் போர் பதினெட்டு நாட்கள் நடக்கிறது.

தங்கள் வழக்கைப் போரில் தீர்த்துக் கொள்வது என்று இறங்கிவிட்டார்கள்.

இனி, குறுக்கிட்டுச் சமாதானம் செய்வது மரபாகாது.

இருப்பினும், போரிடும் தாயாதியர்களுக்கு உதவ முன் வருகிறான் சேர மன்னன் ஒருவன்.

இரண்டு படைகளுக்கும் பதினெட்டு நாட்களும் சோறிட்டு ஆதரிக்கிறான்.

சேரனின் நாகரிகமும் விருந்துபசாரமும் விளங்குகின்றனதானே.

இவ்வாறு செம்மைப்பட்ட மக்களின் சிந்தனைத் தாக்கம் இல்லாமல் மதப் பொதுமை தோன்ற முடியாது என்பதைப் புரிந்து கொள்வது நியாயமானது.

## 10. அன்னியமாவதில் ஓர் அன்யோன்யம்

சம்ஸ்கிருதம் வேத மொழியாக்கப்பட்டதால், எவையெல்லாம் மாறாமல் நிலைத்திருக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டனவோ, அவையெல்லாம் அம்மொழியில் விதிகளாகப் பதிந்து வைக்கப்பட்டன.

இன்றும் கூட ஒருவன் தன் கருத்தோ கற்பனையோ சாசுவதமாய் இருக்க வேண்டும் என்று விரும்பினால் அதை சம்ஸ்கிருதத்தில்தான் எழுதி வைக்கிறான்.

வேத மொழியில் எழுதுவது, தன் எழுத்துக்கு சிரஞ்சீவித் தன்மையைத்தரும் என்ற நம்பிக்கை பலருக்கும் இருந்திருக்கிறது.

சம்ஸ்கிருதத்தில் காளிதாசன் தன் காவியம் புனைந்ததும், நம்மூர் முத்துசாமி தீட்சிதர் தம் கீர்த்தனைகளைப் பாடம் பண்ணி வைத்ததும் இதன் காரணமாகத்தான்.

புத்தன் ஒருவன்தான், தன் போதனைகளை சம்ஸ்கிருதத்தில் சொன்னால் பாமர மக்களுக்குப் போய்ச் சேராது என்று உணர்ந்து, மக்கள் பேசும் பாலி மொழியில் சொல்லி வைத்தான்.

அவனைப் போலவே, தெய்வ பக்தியும் சித்த சுத்தமும் மக்களைச் சென்றடைய வேண்டும் என்றெண்ணிய ஆழ்வார்கள், நாயன்மார்கள், சித்தர்கள் முதலானோர் தங்கள் பரவ

படிப்பகம்

www.padippakam.com



சத்தைத் தாய் மொழியாம் தமிழில் எழுதி வைத்தார்கள்.

வேத மொழிக் காதலினால் தங்களை மக்களிடமிருந்து அன்னியப் படுத்திக் கொண்டவர்கள் மத்தியில் இந்தப் பக்தி மான்கள் புரட்சியாளர்கள்தாம்.

ஆகவே, தமிழில் சொல்ல முடியாது என்றில்லை; வேத மொழியில் சொல்ல வேண்டும் என்னும் விவஸ்தையில்லாத ஆசைதான்.


சமுதாய நடைமுறைகள்தான் ஒரு மொழியில் விதி முறைகளாய் எழுதப்படும்.

இன்று நம் வாழ்க்கையில் நடைமுறைகளாய் அனுசரிக் கப்படும் பலவற்றுக்கு சம்ஸ்கிருதத்தில் விதிமுறைகள் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

பரத நாட்டியம் திராவிடத்தில் நடைமுறையில் உள்ளது.

அதன் சாஸ்திரம் சம்ஸ்கிருதத்தில்தான் உள்ளது.

அதைப்போலவே, நம்மிடம் மட்டுமே பழக்கத்தில் இருக் கும் மருத்துவ முறைகளுக்கு விளக்க விதிகள் சம்ஸ்கிருதத் தில்தான் உள்ளன.



தமிழ் நாட்டில் எல்லா கோயில்களுக்கும் கோயில்கள் உள்ள பல ஊர்களுக்கும் சம்ஸ் கிருதப் பெயர்கள்தான் வைக்கப்பட்டுள்ளன.

தெய்வங்கள் பல ஆரியர்களின் கொடை தான் எனினும், கோயில்கள் திராவிடர்களின் கலாச்சாரச் செல்வங்கள்தாமே.

ஊர்களும் தமிழ் மக்களின் வாழிடங்கள்தான்.

இதனினும் அதிசயம் ஒன்றுண்டு.

நம் மாதங்கள் பன்னிரண்டும் தமிழ்ப் பெயர்கள்.

ஆனால், ஆண்டுகள் அறுபதின் பெயர்களும் சம்ஸ்கிரு தத்தில்தான்.

நாம் பயன்படுத்துவது தமிழ்ப் பஞ்சாங்கம்தான்.

ஆண்டின் பெயர்களை மட்டும் சிரஞ்சீவியாக்கிவிட்டோம்.

ஒரு திராவிடன் பெற்ற பிள்ளைக்கு ‘ஆர்யா’ என்று பெயர் வைத்து விட்டால் அவன் ஆரியன் பெற்ற பிள்ளை யாகிவிடமாட்டான்தானே.

மதம் ஒருவனை மனிதனாய் வாழ்த்தத்தான்; மடைய னாய் மாற்ற அல்ல.

ஆனால் மடையனாய் மாற்றுவதைப் பார்த்துக் கொண் டிருந்தவனும், சகித்துக் கொண்டிருந்தவனும், கோயில்கள் சம்ஸ்கிருதத்தால் அலங்கரிக்கப்படுவதற்கு நிவந்தம் அளித் தவனும் திராவிடன்தான்.

சில சமயம் பெருந்தன்மையே பலவீனமாகி விடுவதில்

படிப்பகம்

www.padippakam.com



லையா. மத விஷயங்களில் அப்படியொரு பலவீனத்திற்காட்பட்டு, தன் சுயதர்மத்தை விரயப் படுத்தியவன் திராவிடன்.

நந்தவனத்தில் தென்றலைச் சுவாசித்தவன், இப்போது அதன் சித்திரத் தீட்டலில் வர்ண நெடியைச் சகித்துக் கொள்கிறான்.

இவ்வாறெல்லாம் திராவிடர்கள் மத சம்பந்தமான எல்லா மேன்மைகளையும் அவர்களுக்கே அளித்து, சம்ஸ்கிருதத்தை வேத மொழியாக ஏற்று, வாழ்க்கை நெறிகளைச் செழுமைப் படுத்துவதில் பங்கேற்று, அவர்களை வாய்மையுள்ள அறிவாளிகளாய் மதித்து வந்திருக்கும்போது,

ஆரியர்கள் என்ன செய்திருக்கிறார்கள்?

## 11. சிறுமையைத் தின்ற சிந்தனை

இருவர்க்கும் பொதுவாய் அமைந்த மதத்தில், கூப்பிய கைகளுக்குள் ஒடுங்கிய படையாக மொழியைப் பயன்படுத்தி, இவர்கள் ஏற்றி வைத்துள்ளார்களே இரண்டு இழிவுகள்!

அவைதான் பெண்ணிழிவும் வர்ணாசிரம தர்மமும்.

பெண் என்பவள் வெறும் போகப் பொருள்; பண்டமாற்றுக்குரியவள்; தனக்கென சுயசிந்தனை யில்லாத ஜடப் பொருள் என்பது இவர்கள் பெண்ணிழிவுத் தத்துவம்.

உளவியல் ரீதியாக இத்தத்துவம் மனித குலம் முழுமையும் பரவிவிட்ட பெரும் தொற்றுநோய். இத்தத்துவத்தின் வெளிப்பாடாக, இவர்கள் பின்பற்றி வந்த வரதட்சிணை என்னும் விலை கொடுத்துப் பெண் விற்கும் பழக்கம் இன்று எல்லா மக்களையும் பற்றிக் கொண்ட ஆழித் தீ..

சம்ஸ்கிருதத்தில் நிறைய காவியங்கள், கதை நூல்கள் உண்டு. எல்லா ரசங்களையும்—சிருங்காரத்தைச் சற்று தூக்கலாகவே—நயமான அனுபவங்களாக்கும் காவியங்ககள்.

தமிழின் எல்லா காவியங்களும் சம்ஸ்கிருதம் தழுவிய வழி நூல்கள்தாம்;

இரண்டைத் தவிர.

அவை, தமிழுக்கே உரிய காவியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும்.

விரல் விட்டு எண்ணும்படியான உலக மகா காவியங்களில் சிலப்பதிகாரமும் ஒன்று என்பதை வழிமொழிவதற்கு எவனாவது ஒரு வெள்ளைக்காரன் குரல் கொடுப்பானா என்று காத்துக் கொண்டிருக்கிற சுய அபிப்பிராயம் இல்லாதவன் இன்றைய தமிழன்.

போகட்டும்.

இந்த இரண்டும் பெண்களை முதன்மைப் படுத்தும் காவியங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



பெண்ணிழிவு இந்த திராவிட மண்ணுக்கு அன்னியமான சரக்கு.

ஆயின், அன்னிய மோகத்தில் அழிகிறவனும் அவனே.

இந்தக் கபட அரசியலிலிருந்து என்று மீள்வானோ.

மற்றொன்று, மனிதர்களை மேல், கீழ் என்று பாகுபடுத்தும் வர்ணாசிரம தத்துவம்.


இது இந்த மண்ணிலேயே இன்னும் வேர் மடியாமல் இருக்கும் சாபம்.

உலகெங்கும், மனிதனுக்கே உரிய ஒப்புமை காணும் அகந்தை காரணமாக, நிறமும் பணமும் பதவியும் மனிதர்களைப் பேதப் படுத்திக் கொண்டிருக்கின்றன.

ஆனால், வர்ணாசிரமம் ஒப்புவமை இல்லாத கேவலம்.

மனத் தெளிவும் அறிவார்ந்த சிந்தனையும் உள்ள எவனையும் கூச்சப்படவைக்கும் அற்பத்தின் வெளிப்பாடு.

வர்ணாசிரம தர்மம் என்ன சொல்கிறது?



படைப்புக் கடவுளான பிரமனின் முகத்தில் பிறந்தவன் பிராமணன்; பிரமனின் தோளில் பிறந்தவன் சத்திரியன்; துடையில் பிறந்தவன் வைசியன்; பாதத்தில் பிறந்தவன் சூத்திரன்.

ஒரே தரத்து மக்கள்.

அவர்கள் பிறப்பிடம் வேறு வேறு என்பதால் இந்தப் பிறவி முழுவதும், ஏன், வரும் பிறவிகள் பலவிலும் வேறுபட்டே வாழ்ந்து மரிக்க வேண்டும்.

முடியும் அடியும் பிரம்மனுடையதுதான் என்றாலும், முடியில் பிறந்தவன் மேல் மகன் என்றும், அடியில் பிறந்தவன் கீழ்மகன் என்றும் இனம் பிரிக்கப்பட்டான்.

'இந்து' என்று அறியப் படுவதில் எனக்குள்ள கூச்சமும் முணுமுணுப்பும் இந்த இழிவுகள் பற்றித்தான்.

இந்த மதத்திலிருந்து வெளியேறிச் சென்றார்களே பல ஏழையர்கள், அவர்கள் வெறும் சோற்றுக்காக மட்டும் செல்லவில்லை; இந்த இழிவு பற்றிய சுரணையாலும்தான்.

சென்ற இடத்திலும் இந்த இழிவு அவர்களைத் தொடர்கிறது இன்னும் பரிதாபம். இந்து மதம் ஏழேழு ஜென்மங்களுக்கு அவர்களுக்கிட்ட சாபம்.

சூத்திரன் என்பவன் சேவிக்கிறவன்.

சேவையைப் பெற்றுக்கொள்கிறவன் அவனுக்கு நன்றியுடையவனாய் இருக்க வேண்டுமே!

இங்கே அப்படி இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



அது அவன் சாபம்.

அவன் அனுபவித்தே தீர வேண்டிய விதி.

இந்து மதத்தை வாழ்வியலாக வைத்துப் பாவித்த திராவிடன் வகுத்த தத்துவத்தையும் பார்க்கலாமே.

'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.'

எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாராட்டி அறவோனாய் நடந்து கொள்ளும் எவனும் அந்தணனே.

அதாவது, ஆரியனாயினும் ஆதி திராவிடனாயினும், அறவோனாயிருந்தால் அவன் அந்தணனாவான்.

இதில் எந்தத் தத்துவம் மதத்தைச் செழுமைப் படுத்துகிறது?

இந்த நான்கு வகுப்புகளிலும் அடங்காத மனிதர்களும் உண்டு.

அவர்கள் ஆதிதிராவிடர்கள்— தாழ்த்தப்பட்டவர்கள்.

எதிலிருந்து, என்னவாய்த் தாழ்த்தப்பட்டவர்கள்?

மனிதர்களாய் எண்ணப் படுவதற்கே தகுதியற்றவர்களாய், மனிதப் பகுப்பிலிருந்தே ஈனப் பிறவிகளாய்த் தாழ்த்தப்பட்டவர்கள்.

இதை வகுத்தவனின் ஈனத்தனத்தை எதனால் அளப்பது?

## 12. பாசாங்கற்ற ஓர் இந்து

ஆதிதிராவிடர்கள் அதிஷ்டசாலிகளாம்.

எப்படி?

"அவர்கள் மட்டுமே தாய் வயிற்றில் பத்துமாதம் வளர்ந்து முறையாகப் பிறந்த முழுமையான மனிதப் பிறவிகள். மற்றவர்கள் மனிதர்களே இல்லை."

இது என் கருத்தல்ல.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் விமர்சனம்.

இது இடக்கான பதிலாக உங்களுக்குப் படுமானால், வர்ணாசிரம தர்மம் அதைவிடவும் இடக்கான, ஈனத்தனமான விதி என்பதை மறந்துவிடக் கூடாது.

பெரியார் ஈ. வே. ரா திராவிடர்களுக்குத் தந்தையாக வந்து வாய்த்தவர்.

" தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்" அல்லவா.

செய்து காட்டியவர்.

திராவிடர்களின் இழந்து போன மரியாதைகளை மீட்டுத் தந்து, அவர்களை மீண்டும் ஒருமுறை வேஷங்களற்ற,

படிப்பகம்

www.padippakam.com



பாசாங்கற்ற இந்துக்களாக வாழ வைத்தவர்.

இயக்கமாய்ச் செயல்படுவது என்றானவுடன், அவர் தூஷித்த ஜாதிப் பெயருக்கு, துவேஷத்தின் உச்சமாய், செவி கூசும்படியான சொற்களை அடைமொழியாக்கியவர்.

ஆயிரங்காலத்து ஈனத்தனத்தை அரை நூற்றாண்டுக்குள் நொறுக்கித் தள்ளியவர் வேறெப்படிச் செயல்படுவார்?

ஆனால், தனிப்பட்ட முறையில் அவர் மனிதர்களைத் தூஷித்ததில்லை.

அதையெல்லாம்விட, மூதறிஞர் என்று போற்றிப் புகழப் பட்ட ஆர்ய மைந்தராம் இராஜாஜிக்கு- அவர் மறைவின்போது தம் கம்பீரத்தையெல்லாம் மறந்து கதறியழும்படியான, உயி ருக்குயிரான நண்பராயிருந்தவர்.

இது எப்படி சாத்தியப்பட்டது?

பெரியார் அவர்கள் சின்னஞ்சிறியர் என்றாலும், அவர்க ளையும்கூட "ஐயா, வாருங்கள்," என்று அன்போடு வர வேற்று, சரியாசனம் தந்து, பணிவுதான் என்னும்படி யான மரியாதை மிக்க சொற்களால் உரையாடி, வாசல் வரை வந்து வழியனுப்பி—

குழந்தையிலிருந்து கிழவன்வரை ஒவ்வொருவரும் இறை வனின் அம்சம் என்று உணரத் தெரிந்த மனித நேர்த் திக்குத்தான் அப்படியொரு பவ்யம் வரும்.

அவரை விட எந்தக் கொம்பன் ஐயா ஓர் உயர்வான இந் வாய் வாழ்ந்து முடித்தான்?

இதை அறிந்ததனால் அல்லவா இருவரிடையேயும் அந்த நட்பு சாத்தியப்பட்டது!

இப்படிப்பட்ட இந்து தர்மத்திற்குப் பெண்ணிழிவும் வர் ணாசிரமமும் அவமரியாதைகள் அல்லவா.

இவை பற்றிக் கேள்வி எழுப்பினால், உடனே வேதவிற் பன்னர்கள் உபன்யாசிகளாய் மாறி வியாக்கியானம் செய்ய முயல்கிறார்கள்.

வாழ்க்கைத் தத்துவங்கள் நேர்ப் பொருளில் விளங்க வேண்டும்.

வியாக்கியானங்களால் விளக்கப்படக் கூடாது.

அப்படி விளக்கப் பட்டால், அவை தத்துவங்கள் அல்ல; பித்தலாட்டங்கள்.

இவை போன்ற முரண்கள் பற்றிக் கேள்வி எழக்கூடாது என்பதற்காகத்தான் சம்ஸ்கிருதம் வேத மொழியாக்கப்பட்டு, அதை 'பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர்கள்' மட்டுமே பயில வும் பயன் படுத்தவுமான பரம்பரை பாத்தியதை வழங்கப் பட்டதா?

இது எப்படி நேர்ந்தது?

படிப்பகம்

www.padippakam.com




## 13. மதத்தில் விதைத்த சுய வக்கிரம்

இந்து மதம் இருவர்க்கும் பொதுவாய் ஏற்றுக் கொள்ளப் பட்டாலும், ஆரியர்களிடையே அது சனாதன மதமாகவும், திராவிடர்களிடையே அது வாழ்வியல் மதமாகவும் எல்லை கட்டிக் கொண்ட போதே இது நேர்ந்திருக்க வேண்டும்.

கால வெள்ளத்தில், சில சர்ச்சைக்கிடமான தருணங்களில் ஓர் இனமோ, இயக்கமோ, நிதானமும் விவேகமும் மிக்க முதியவர்களின் பிடியிலிருந்து, சீற்றமும் பதற்றமும் மிகுந்த குளைய தலைமுறையின் பிடிக்குள் போய்விடுவதுண்டு.

அந்தக் கட்டத்தில், இருக்கும் கட்டமைப்பை இழுத்துக் கட்டுவதாகச் சொல்லி, இயல்புக்குப் பொருந்தாத புதிய முரண்பாடுகளை இணைத்துக் கொள்வதுண்டு. அவை புதி யன என்பதாலேயே தீவிரமாகத் திணிக்கப்பட்டு, பின்னர் பழக்கம் காரணமாக, பற்றுக் கணக்கில் விலக்கப்பட வேண் டிய அவற்றை வரவுக் கணக்கிலேயே ஏற்றிக் கொள்வதுண்டு.



இந்து மதத்திலும் இப்படியொரு கட்டம் சம் பவித்துள்ளது.

இரண்டு இனங்களின் பொது மதமாக அது அங்கீகாரம் பெற்ற காலத்திலேயே சம்பவித் துள்ளது.

இந்தப் பொதுமையில் தங்கள் இன மேன்மை கரைந்து விடும் என்னும் நியாயமான அச்சத்தால், கரைந்து விடாமல் காப்பாற்ற வேண்டும் என்னும் சுய வக்கிரத்தால், புதிதாக வந்தவர்களிடம், 'நாங்கள் முகத்தில் பிறந்தவர்களாக்கும்' என்று பிரகடனப் படுத்திக் கொள்ளத்தான் இந்த வர்ணா சிரம தர்மம் கூடுதல் கோட்பாடாகச் சேர்க்கப்பட்டது என் பதை வேதங் கற்றவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். வேதங்க ளில் இந்த விஷயம் விடுபட்டுப் போனது போலும்!

இவ்வாறு புகுத்தப்பட்ட இந்தப் புதிய சித்தாந்தம் தன் ரத, கஜ, துரக, பதாதிகளுடன் ஆரியவர்த்தத்தில் தன் ஆக் கிரமிப்பைத் தொடங்கி, அதன் வெற்றி நிச்சயிக்கப்பட்ட பின், இவர்களைத் தோழமையோடு மரியாதைப் படுத்திய திரா விட மக்கள் மீது மதத்தின் ஒரு சம்பிரதாயமாக, வெகு அசட் டையாக, அறிமுகப்படுத்தப்பட்டது.

மனிதன் எப்போதும் அடிமை கொள்ளத் துடிக்கிறவன் தானே.

திராவிடன் மட்டும் விதிவிலக்கா என்ன?

வர்ணாசிரமத்தின் தாக்கம் மெல்ல மெல்ல வேர் பிடிக் கத் தொடங்கிய போது, மதம் முற்றுமாக ஆரியர்கள் கைக் குப் போய்விட்டது.

www.padippakam.com



திராவிடனும் தாயாதிச் சண்டைகளில் தளர்ந்தான்.

இருந்தும் அவன் ஆளுமை போகுமோ!

பழைய பெருங்காயக் கலயமாயிற்றே!

ஆகவே, இவன் சூத்திரனாக்கப்பட்டதைக் கணக்கில் கொள்ள மறந்து, இனப் பகுப்பிலேயே ஒதுக்கப்பட்டுப்போன ஆதி திராவிடனை இவனுடைய சூத்திரனாக்கிக்கொண்டான்.

திராவிடனின் இந்த வக்கிரச் சீரழிவுக்கு ஆரியனும் வெகு அனுசரணையாக இருந்தான்.

ஆரியனும் திராவிடனும் ஒன்றுபோலவே இணைசேர்ந்து, ஆதி திராவிடனை, நீரில் கழுவியும் நிவர்த்திக்கவியலாத தீட்டுப் பொருளாய்ச் சபித்து மகிழ்ந்ததால், திராவிடன் பெற்ற சூத்திர முத்திரையை 'வெறும் பெயர்தானே தவிர ஒன்றும் பிழையான விஷயமே அல்ல' என்பது போல வியாக்கியானப் படுத்திக்கொண்டு விட்டான்.

இந்தச் சூத்திரத் தேடலில், திராவிடனானவன் பன்றியோடு சேர்ந்த கன்றாய்ச் சிறுத்துப் போனமைக்காக ஆதி திராவிடனிடம் கல்ப கோடி காலம் மன்னிப்பைக் கோர வேண்டியவனாகிவிட்டான்.

திராவிடச் சராசரிகள் நல்ல உழைப்பாளிகள். உழைப்புக்கு மேலாக யோசிக்க முயலாதவர்கள்; அதனாலேயே, 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்று இழுத்த இழுப்புக்கெல்லாம் நட்பு காட்டும் பாமரத்தனத்தைப் பலமாய் ஏற்றிக் கொண்டவர்கள்.

ஆரியச் சராசரிகள் படிப்பாளிகளாய்க் காட்டிக்கொள்ளும், வேதங்களை உச்சரிக்கத் தெரிந்த கற்றுச் சொல்லிகள். தம் அதீதக் கற்பனைகளையெல்லாம் சோதித்து மகிழக் கிடைத்த பாமரக் களத்தை நன்றாகப் பயன்படுத்திக்கொண்ட சூழ்ச்சிக் காரர்கள்; அந்த சூழ்ச்சியையே அறிவாகத் தீட்டிக்கொண்டவர்கள். தங்கள் ஆரியக் கூத்தை வெகு நீக்குப் போக்கோடு அரங்கேற்றத் தெரிந்தவர்கள். காரியத்தில் கண்ணாயிருக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தவனைக் கலங்கல் குட்டையாக்கிய அதியற்புதச் சாகசக்காரர்கள்.

இந்தச் சாகசமும் சூழ்ச்சியும் மட்டும் இல்லாமல் போயிருந்தால், இந்துமதம் உலகப் பொதுவியலாக வியாபித்திருக்கும்.

மனிதச் சிறுமைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட, ஆரிய-திராவிடப் பேரறிவாளர்களின் உலகளாவிய சான்றாண்மை அப்படிப்பட்ட சிகரம்.

ஆரியர்களைத் தோழர்களாய் ஏற்றுப் போற்றி வளர்த்த திராவிடர்களையே தங்களுடைய வர்ணாசிரமத் தத்துவத்தால் கொச்சைப் படுத்திவிட்டார்கள் அவர்கள்.

மத ஒருமைப்பாட்டுக்கு மட்டுமல்லாமல், திராவிடப் பேராண்மைக்கும் இது ஒரு நம்பிக்கைத் துரோகம்.

படிப்பகம்

www.padippakam.com



## 14. ‘இந்து ராஜ்யம்’ - என் அடிமை சாசனம்

இந் நம்பிக்கைத் துரோகம் பல நூறு ஆண்டுகளாக அறியப்பட்டதுதான் எனினும், இன்றுபோல் என்றும் உணரப் பட்டதில்லை.

பெரியார் ஈ.வே.ரா.கூட இதைப் புறங்கையால் ஒதுக்கி விட்டதாக எண்ணியவராய்ப் போய்ச் சேர்ந்தார்.

ஆனால், இதன் விஷ ஆதர்சம் வேறெப்போதும் இல்லாத வகையில் இன்று உணரப்படுகிறது.

காரணம், இந்தச் சனாதனிகள் தங்கள் இறுதி யுத்தத்தைப் பிரகடனப் படுத்திவிட்டார்கள்.

எதன் பொருட்டு யுத்தம்?

மதத்தின் பொருட்டு;

‘இந்து ராஜ்யம்’ அமைப்பதன் பொருட்டு.

அதாவது, இந்து மதம் இந்த நாட்டின் அரசியல் மதமாகப் பிரகடனப் படுத்தும் பொருட்டு.

ஓர் ‘இந்து’வாகிய நான் இதற்குச் சந்தோஷம் கொள்ள வேண்டும்.

ஆனால் ‘பகீர்’ என்று அச்சம் வந்து என்னைப் பற்றி உலுக்குகிறதே.

‘இந்து ராஜ்யம்’ அமைக்கக் கங்கனம் கட்டிக் கொண்டவர்கள் இந்து மதப் பழமைவாதிகள்; இந்து மதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணற்ற கடவுளர்களின் மூட பக்தர்கள். வர்ணாசிரம தர்மம் வகுத்து வைத்த பல்லாயிரம் பேதங்களையும் இந்து மதத்தின் மூச்சுக் காற்றாக நம்பிச் செயல்படத் துடிக்கும் சுதர்மத்தைக் கொன்ற பித்தர்கள்; இந்து மதம் மனித இனக் கோட்பாடாக அங்கீகரிக்கப்படாமல் தடுத்த ‘மதம் பிடித்த’ சழக்கர்கள்.

ஆக, சனாதன மதம் அரசியல் மதமாகக் கையில் ஏந்தப்பட்டுவிட்டது.

இந்த அரசியல் வெற்றி பெற்றால்—

இந்து ராஜ்யத்தின் புதிய அரசியல் சட்டம் எழுதப்படும்.

அதில் வர்ணாசிரமம் முகப்பு வாசகமாய் அமையும்.

அங்கே நான் ஓர் அடிமை.

என்னைப் போலவே, என் இந்து சகோதரர்கள் தொன்னூற்றைந்து சதவீதம் பேர் அடிமைகளாக நிரந்தரப்படுத்தப் படுவார்கள்.

வர்ணாசிரம தர்மம் சனாதனிகளின் ஆயிரங்காலத்துப் பயிர்.

இப்பொழுதே கூட, இந்தியாவின் வடக்குப் பகுதியில் பெரும்பாலான இந்துக்கள் சனாதனிகள் கையில் தாங்கள்

படிப்பகம்

www.padippakam.com





அடிமைகள் என்று அறியாமலேயே அடிமைகளாகத்தான் இருக்கிறார்கள்.

தென்னக மண்ணில் ஒரு பெரியார் தோன்றியிராவிட்டால் இங்கேயும் அதே கதைதான்.

நான் இந்துவாய் இருப்பது அடிமையாய் இருக்கத்தான் என்று தீர்மானிக்கப் பட்டுவிட்டால்,

என்னால் அது முடியாது.

அடிமையாய் இருக்க முடியாது.

## 15. ராமனின் வானரமல்ல நான்

ஏ ஆர்ய!

'இந்து ராஜ்யம்' அமைப்பதன் முதல் படியாக நீ செய்தது என்ன?

நம்பிக்கைத் துரோகம்.

நய வஞ்சகம்.

அறிவுக்குப் பொருந்தாத, உன் எதிர்கால வியாக்கியானங்களே வெட்கும்படியான, அடாவடித்தன அரசியல் சாகசம்.

நீ தோன்றிய தொன்மைக் காலத்திலிருந்தே, நேர்மையாக வெல்லும் வழியை நினைத்துப் பார்த்ததே இல்லையா?

'சூழ்ச்சிதான் ராஜதந்திரம்' என்பது, வேத கோஷங்களால் உன்னில் கெட்டிப்படுத்தப்பட்டதா?

தந்திரத்தால் பெற்ற வெற்றி, ஒருநாள் தரித்திரனின் பசிப்பிணி போல் தின்றழிக்கும் என்பதை நீ தெளியாயா?

பாபர் மசூதியை இடித்துவிட்டாய்.

மசூதியை மட்டுமா இடித்தாய்?

இந்த நாட்டின் மானத்தை, மரியாதையை, சகிப்புத்தன்மையை, அகிம்சையை, அதற்கெல்லாம் மேலாக, பல்லாயிரம் ஆண்டுகளாக மெல்ல மெல்லச் சேமித்து வைத்த பிரபஞ்ச நேசத்தையெல்லாம் ஒட்டு மொத்தமாய்ச் சேர்த்து இடித்து நொறுக்கிவிட்டாய்.

என் இந்து மதத்தைக் குத்திக் குலைத்துக் குற்றுயிராக்கி விட்டாய். இந்து மதத்தில் வெகு காலமாக நீ சேர்த்துக் கொண்டிருந்த குப்பைகளையெல்லாம் ஆயுதங்களாய் மாற்றி விட்டாய்.

நரமாமிச பட்சினியாய் நீ வாழ்க்கையை எங்கே தொடங்கினாயோ, அங்கேயே வட்டமடித்துக்கொண்டு வந்து, காட்டுமிராண்டியாகவே உன்னைக் காட்டிக் கொண்டாய்.

படிப்பகம்

www.padippakam.com



இந்த மண்ணின் மாண்பை எரியூட்டி, அதன் சாம்ப லில் உன் சாம்ராஜ்யத்தை எழுப்ப உத்தேசித்தாயா?

இந்துச் சனாதனியாய், இந்த எரியூட்டும் வேலையை இதற்கு முன்பே நீ தொடங்கிவிட்டாய்.

இந்திய மக்களின் மாண்புகளையெல்லாம் ஒன்று திரட் டிக் கவசமாய்த் தரித்து, அன்னிய ஆதிக்கத்தை வென்றானே காந்தி என்னும் தந்தை.

அவன் வெறும் சுதந்திரத்தை மட்டுமா வென்று தந்தான்.

'இந்தியா ஒரு அகிம்சை தேசம்' என்னும் பிரமிப்பூட் டும் உலக நம்பிக்கையையும் சேர்த்தே வென்று தந்தான்.

அவனைத்தானே நீ முதலில் கொன்றாய்!

சூத்திரனைக் கொல்வது உன் சுதர்மம் என்பாயோ?

அவனைக் கொன்ற போது, ஒரு முண்டு கட்டிய கிழவ னையும், அவன் வாயின் எச்சிலைச் சுவைத்துக் கொண்டி ருந்த ராம நாமத்தையும் மட்டுமே கொன்றாய்.

இன்றோ, இந்த நாட்டுக்காக அவன் வென்று தந்த 'அகிம்சை தேசம்' எனும் உலக நம்பிக்கையையே கொன்று விட்டாயே.

உன் ராமன் இதைச் சகிப்பானா?

ராம நாமத்தை உன் துர்நாற்றம் பிடித்த ஆதிக்க வெறிக் காகக் கேவலப்படுத்துகிறாய் என்பதை,- இன்று உன் போரில் வானரப் படைகளாய் இறக்கிவிட்டிருக்கிறாயே, உன் சூத்திரர் களை?- அவர்கள் புரிந்துகொள்ளவே மாட்டார்கள் என்று நம்புகிறாயா?

காந்தி தேசமாய் அறியப்பட்ட இந்த நாட்டை,

கோட்சேயின் தேசமாய்ப் பிரகடனப் படுத்திவிடவா இத் தனை ஆவேசம்?

உன் வெற்றிக்குத் துணையாக மிகப்பெரிய வானரப் படையையே திரட்டியுள்ளாய்.

அன்று, உன் ராமனுக்கு ஒரு குரங்குப் படை உதவியது.

அந்தக் குரங்குகளுக்கு இராவணன் மேல் ஒரு வழக்கும் இல்லை. ஆயினும், ராமன் தன் நலத்துக்காக அவர்களைத் தன் பக்கம் திரட்டினான்; வென்றான்.

வென்ற பின் குரங்குப் படை என்னாயிற்று?

'சொர்க்கம் உங்களுக்கு நிச்சயம்' என்று, அதனுடைய சாவியை அவர்கள் கையில் கொடுத்துவிட்டான், இல்லையா?

வால்மீகி வெகு அர்த்தத்தோடுதான் அவர்களை வானரங் களாக அறிமுகப் படுத்தினான்.

கட்டு மீறிய அட்டகாசம் புரிவன வானரங்கள் மட்டுமே.

அதே மாதிரியான அட்டகாசம்தானே அந்தக் கறுப்பு ஞாயிறன்றும் நடத்திக் காட்டப்பட்டது!

படிப்பகம்

www.padippakam.com



—பாவிகள்! அவர்களுக்கு என்று விளங்கப் போகிறது, அவர்கள் விலங்குகளை அவர்களே தயாரித்துக் கொள்கிறார் கள் என்னும் அதிர்ச்சியூட்டும் உண்மை?

இந்த இந்து வானரங்களை நன்றாகவே பொய் மயக்கத் தில் ஆழ்த்தியிருக்கிறாய், 'இந்து ராஜ்யம் நம் ஜென்ம சாபல்யம்' என்று; 'ராமர் கோயில் பொன்னுலகு கொண்டு செல்லும் தங்கத் தேர்' என்று.

## 16. மதம் தின்னிக் கழுகுகள்

'இந்து ராஜ்யக்' கனவை இந்தப் பாமரர்களிடம் ஊட்டி வளர்க்க நீ எடுத்த ஆயுதம் இஸ்லாமியத் துவேஷம்.

சிறுபான்மையினரில் முஸ்லிம்கள் கணிசமாகப் பெருகி யிருப்பது, சொந்த மதத்து மக்களையே வர்ணாசிரம விலங் கில் முடக்க நினைக்கும் உனக்கு ஒரு பெரிய சவால்தான்.

இந்தியாவில் தோன்றிய எல்லா மதங்களையும் கபளீகரம் செய்வதில் வல்லவன்தான் நீ.

பௌத்தம், ஜைனம் இரண்டும் உன் பசித்த வாய்க்குப் பொரியுருண்டைகளாய்ப் போயின.

அடுத்து வந்த சீக்கிய மதத்தை ஏறக்குறைய இந்து மதத் தின் ஓர் அங்கமாகவே சமீப காலம் வரை வைத்திருந்தாய்.

அதையும் கபளீகரம் செய்திருப்பாய்.

அதற்குள் முஸ்லிம்கள் நுழைந்து விட்டார்கள்.

அகதிகளாக வந்திருந்தால் முதல் அடியிலேயே விழுங்கி யிருப்பாய்.

ஆனால, அவர்கள் ஆட்சியாளர்களாய் வந்தார்கள்.

பல நூற்றாண்டுகள் ஆண்டார்கள்.

ஆட்சியாளர்களின் மதம் பரவத்தானே செய்யும்.

பரவியது.

அவர்கள் ஆட்சி முடிவில் ஆங்கிலேயர்கள் வந்தார்கள்.

கிறிஸ்துவம் வந்தது.

அந்த ஆட்சி முடிவில் மதச் சார்பற்ற ஆட்சி முளைத்தது.

காந்தி பெயரைச் சொல்லிக்கொண்டு இந்த அரசி யல்வாதி என்ன பாவம் செய்தாலும் இந்த ஒன்றுக்காக அவனை மன்னிக்கலாம்:

அடிநாள் தொட்டு துண்டு துண்டாய்ச் சிதறிக் கிடந்த பாரத மண்ணை ஒன்றாய்ப் பிணைக்க வல்லது மதச் சார் பற்ற அரசுதான் என்பதை இன்னமும் வாயளவிலாவது சொல் லிக் கொண்டிருக்கிறானே, அதற்காக மன்னிக்கலாம்.

ஒன்றன் பின் ஒன்றாக வந்த ஆட்சிப் படை யெடுப்பில், உன்னால் இந்த அன்னிய மதங்களை விழுங்கமுடியாமல் போயிற்று.

படிப்பகம்

www.padippakam.com



இப்போது ஜனநாயகம் என்ற பெயரில் நடக்கும் மதச் சார்பற்ற ஆட்சியில், நீயே ஆட்சியமைக்க முடியும் என்பதால், மெல்ல மெல்லத் திட்டமிட்டு இந்த ஏழை நாட்டில் மத அடிப்படை வாதத்தைப் புகுத்தியுள்ளாய்.

## 17. நாடு மக்களுக்கா? மதத்துக்கா?

இந்தியாவை மத அடிப்படையில் பிளந்தவர்கள் என்ற கோபத்தை முஸ்லிம் மக்கள் மேல் வளர்த்தாய்.

இந்திய உபகண்டம் ஒன்றாயிருக்கக் கனவு கண்டவர்களுக்கெல்லாம் இது ஒரு தீராத சோகம்தான்.

ஆனால், அந்தச் சோகத்தை உன்னிடம் கோபமாக வளர்த்துக் காட்டினாய்.

“மத அடிப்படையில் பிரிந்து போன போதே எல்லாரும் போயிருக்க வேண்டியதுதானே, இங்கே ஏன் கணிசமாகத் தங்கினர்? இந்த தேசத்தையே கபளீகரம் பண்ணத்தானே?” என்று கோபம் வளர்த்தாய்.

இந்தக் கோபம் எத்தனை சிறுபிள்ளைத்தனமானது!

இந்திய முஸ்லிம்கள் எங்கே போனார்கள்?

ஈரானுக்கோ, எதியோபியாவுக்கோ போனார்களா?

இந்தியாவில்தானே, தங்களுக்கென்று ஒரு இடத்தைப் பகிர்ந்து கொண்டு நின்றார்கள்?

காரணம், இது அவர்கள் தாய்நாடு.

இப்போது இந்தியாவில் எஞ்சியிருக்கும் பதினைந்து கோடி முஸ்லிம்களுக்கும் இன்னொருமுறை ஓர் இடம் ஒழித்துக் கொடுக்க மற்ற எல்லோரும் தயார் என்றால் அவர்களும் கூடத் தயாரானாலும் ஆகலாம்.

நீ இந்த நாட்டை நேசிக்கிறாயா?

அல்லது உன் மதத்தை நேசிக்கிறாயா?

இந்த நாட்டைத்தான் என்றால், இதிலிருந்து பிரிந்து போன பாகிஸ்தான், பங்களாதேஷ் பகுதிகள் மீதும் உனக்கு நேசம் இருக்கவேண்டும். அதன் மூலம் அந்த மக்கள் மீதும் மாறாத நேசம் வளர்ந்திருக்கும்.

நீ உன் மதத்தை நேசிப்பதால் அல்லவா பிரிந்து போன இந்திய மண்ணை, வேதம் வளர்த்த மண்ணை, பகை மண்ணாய் வெறுக்கிறாய்!

இஸ்லாமிய நாடாக ஒரு பகுதி பிரிந்ததும், இங்கே தங்கி விட்டவர்களை நீ அகதிகளாய் நினைக்கிறாய்.

இது உன் புத்திசாலித்தனத்தைக் காட்டவில்லை.

மாறாக உன் போக்கிரித் தனத்தையே காட்டுகிறது.

இப்படி நினைத்துப் பார்.

படிப்பகம்

www.padippakam.com



ஒருவேளை, இந்தியாவின் என்பத்தைந்து கோடி மக்களும் நாளை இஸ்லாமியர்கள் ஆகிவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள், உன்னையும் சேர்த்துத்தான்.

அவர்களை எங்கே அனுப்புவது?

இந்த நாடு மதத்துக்குச் சொந்தமானதா?

அல்லது, மக்களுக்குச் சொந்தமானதா?

பல ஆயிரம் ஆண்டுகளாக நீ வளர்த்து வந்த பிரம்ம ஜனன நம்பிக்கை இந்த நாட்டை உன் மதத்துக்குச் சொந்தம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறது.



இது மடமையல்லவா.

இந்த மடமையை முதலாக வைத்து எவ்வளவு காலம் மத வியாபாரம் நடத்துவாய்?

ஆர்ய! என் அன்புச் சகோதர!

இன்று, பௌதிக ரீதியாக ஆரிய மரபணுக்களை அதிகச் சேதாரமில்லாமல் தக்க வைத்துக்கொண்டுள்ள அநேகம் பேர் இஸ்லாத்திலும் ஏசு மதத்திலும்தான் இருக்கிறார்கள்; இந்து மதத்தில் இல்லை என்பது தெரியுமா உனக்கு?

அனுமானத்தில் உன்னை இயக்கும் பலமெல்லாம், வேத மொழியில் நீ ஏற்றி வைத்துள்ள வேற்றுமைத் தத்துவம் தவிர வேறென்ன சொல், பார்க்கலாம்?

பாபர் மசூதியை இடிக்கத் தோன்றியதே.

பாபர் ஒரு கோயிலை இடித்துக் கட்டினான் என்பதே உண்மையாகட்டும். அப்போது அவன் அரசன்.

உன் பாட்டன் பூட்டன் எல்லாம் பார்த்துக் கொண்டு தானே இருந்தான்?

தடுக்கவில்லையே! தடுப்பது இருக்கட்டும்.

மண்ணைப் பிடிக்க மகுடம் தரித்து வந்த ஆக்கிரமிப்பாளனிடம் ஐயத்திற்கிடமில்லாத அபிமானத்தைப் பெறுவதற்கான அதீத வெளிப்பாடாக, கோயிலின் கடைக்காலில் மசூதி கட்டியதை அங்கீகரித்து, "அதனால் என்ன மகா ராஜாவே, எம்மதமும் சம்மதம். வழிபாட்டுத் தலம் கசாப்புக் கடையாக மாறவில்லையே. சந்தோஷம், மன்னவா," என உன் மூதாதையருள் ஒருவன் வாழ்த்தியிருந்தால்கூட ஆச்சரியமில்லை.

எந்த வெள்ளத்திலும் நாணலாய் வளைந்து கொடுத்து தன்னைக் காத்துக்கொள்ளும் உன் பிறவிக்குணம் அப்படிப் பட்டதல்லவா!

ஆனால், இப்போது நீ அரசனாகவே, அனுமானித்துக் கொண்டாய்தானே.

படிப்பகம்

www.padippakam.com



அதனால்தான் உன் வானரங்களைக் கொண்டு இடித்துத் தரைமட்டமாக்கி விட்டாயா?

ஏ ஆர்ய!

இந் நாட்டில் எந்த மதத்தைச் சேர்ந்தவனும் இங்கேதான் பிறந்தான்; இங்கேதான் மடிவான்.

அவன் மதம் உனக்கு அன்னியமாகலாம்.

ஆனால், உன்னுடைய தேசம்தான் அவனுடைய தேசம்.

இந்த தேசம் வீழ்ந்தால் உன்னோடு அவனும் வீழ்வான்.

இதை நீ மறந்துவிட்டால் உன்னிலும் மதவெறியன் உலகில் வேறெவனும் உண்டா?


ஒன்று, அவர்களோடு சக வாழ்க்கைக்கு தயாராயிருக்க வேண்டும். இல்லையேல் இன்னொரு பிரிவினைக்குத் தயாராக வேண்டும்.

இதில் எது உசிதமானது?

## 18. வஞ்சகம் வென்றதில்லை

பாபர் மசூதி இடிக்கப்பட்டது கட்டுப்பாடற்ற கர சேவகர்களின் வெறிச் செயலால்தான் என்று நாடகமாடலாம்.

வெறும் கடப்பாறை, மண் வெட்டி, ஈட்டி, சூலம், வேல், அலகு இவைகளை வைத்துக் கொண்டே மூன்று பெரிய கூண்டுகளைச் சுத்தமாய் உடைத்து, வெகு சுத்தமாய் அள்ளிக்கொட்டி தளத்தைச் செப்பனிட்டு, ராம லட்சுமணர்களின் சிலைகளை வைத்துச் சிறு கட்டமைப்புச் செய்து—



பதினெட்டு மணி நேரத்தில் இத்தனையும் கச்சிதமாக பக்தி வெறியில் குதித்துக் கொண்டிருந்த இரண்டரை லட்சம் கர சேவகர்கள் செய்தார்கள் என்றால் நம்பக்கூடியதா?

பலகாலமாகத் திட்டமிட்டு, வேண்டிய கருவிகளைச் சேமித்து, பொறியியல் உத்தி வகுத்து, உயிர்ச்சேதம்- பொருட்சேதம் கணக்கிட்டு, காலம் கணித்து—

போர் முனையில் உள்ள ராணுவப் பொறியியல் பிரிவு கூட இத்தனை பிசிறில்லாமல் இப்படியொரு திட்டத்தைச் செயற்படுத்துமா?

படிப்பகம்

www.padippakam.com



ஆக, செய்தது இதற்கெனப் பயிற்சி பெற்ற குழு.

அவர்களைக் காத்தது, காட்டுமிராண்டிகளைப் போல வேஷமிட்டு ஆடிக் கொண்டிருந்த கர சேவகர்கள்.

நாட்டுக்குச் சொன்னது 'கட்டடம் காக்கப்படும்' என்று.

'அயோத்தியில் அந்த நாளில் அடையாள பூஜைதான் நடக்கும்; மசூதி காக்கப்படும்' என்று உச்சநீதி மன்றத்துக்கு, ஒருமைப்பாட்டு மன்றத்துக்கு, அரசியல் சாசனத்திற்கு, பிரதமமந்திரிக்கு, உள்துறை அமைச்சகத்துக்கு, கவலையுற்ற தலைவர்களுக்கு, நாட்டு மக்களுக்கு, உலகத்துக்கு, திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டு, குறிப்பிட்ட நேரத்தில் புயல் போல் நுழைந்து தரை மட்டமாக்கினீர்களே.

இந்த நம்பிக்கைத் துரோகத்துக்கு ஒரே ஒரு செயலைத் தான் ஒப்பிடமுடியும்:

ஹிட்லரின் வெறிச் செயலை.

'நான் ஆரியன். இந்த உலகத்தை ஆளப் பிறந்தவன்' என்று நம்பித்தான் அந்த நாசி அப்படியொரு ஆட்டம் ஆடினான். அவன் செய்து கொள்ளும் சமாதான உடன்படிக்கையின் மை காய்வதற்குள் அந்த நாட்டின் மீது குண்டு மாரி பொழிந்து தாக்கியவன் அவன்தான்.

சூழ்ச்சி எப்போதும் வெல்லாது என்பதை நீதானே வேதத்திலிருந்து மேற்கோள் காட்டுவாய்?

ஆனா,ல் அயோத்தியில் உன் ராம பக்தியை சூழ்ச்சியாலேயே பெருக்கிக் காட்டுகிறாய்.

50 ஆண்டுகளுக்கு முன் இரவோடிரவாகத் திருடனைப் போல்தான் ராமனை பாபர் மசூதிக்குள் முளைக்கவைத்தாய்.

இன்றைக்கு ஒரு சண்டாளனாக மாறித்தான் ராமனை அங்கே நட்டு வைத்துள்ளாய்.

அதர்மத்தின் அத்துமீறல்தானா உன் ராம பக்தி?

சண்டாளர்கள் நிறுவிய சிலைகளைத் தரிசிக்க அனுமதி மறுத்தால் சாகும் வரை உண்ணாவிரதம் என்று மிரட்டுகிற சாதுக்கள்தான் இந்து மதக் காவலர்கள் என்றால்,

நியாயமும் நேர்மையும் கோண்ட ராஜரீக வழியில் ராம ஜன்ம பூமியை நிர்ணயிக்கும் சான்றாண்மை உன்னைக் கம்பீரப்படுத்தவில்லை என்றால்,

சண்டாளத்தனம்தான் உன் அடையாளம், அல்லவா?

நல்ல விஷயத்தை எப்போதும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்றுதானே 'வேதத்தின் கற்றுச் சொல்லியாக' உன்னைச் சகித்துக் கொண்டிருக்கிறோம்?

நீயே சூழ்ச்சியால் வெல்ல முயல்கிறாயே!

வென்றாலும், அதன் எதிர் விளைவுகள் உன்னை வீழ்த்தி விடாதா?

படிப்பகம்

www.padippakam.com



## 19 விவகாரமாகும் விசுவாசம்

இங்குள்ள முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கே விசுவாசமாயிருக்கிறார்கள்; இந்தியாவுக்கல்ல என்று குற்றம் சாட்டுகிறாய்.

முஸ்லிம்கள் அத்தனை பேரும் நல்லவர்கள் என்று வக்காலத்து வாங்குவது என் வேலையல்ல.

நீரில் விழுந்த கல்லைப்போல அவர்கள் அதீத மனச்சிதறலுக்கு ஆளாகிறவர்கள்தான். அடிப்படையில் அவர்களின் மதத் தலைவர்கள் மதப் பழமைவாதிகளாகத்தான் தங்களை வெளிப்படுத்துகிறார்கள் என்பது உனக்கு வெறியூட்டும் மதுரசமாய்த் தித்திக்கிறது.

'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று எங்கோ ஒரு வெறிக் குரல் தன் மடமையை வெளிப்படுத்துகிறதுதான். இது மடமை மட்டுமல்ல; கொள்ளிக் கட்டையால் தன் தலையைச் சொரிந்து கொள்கிற கேணைத்தனம் என்பதை அந்தக் குரலுக்குரியவன் உணரவேண்டும்.

இதற்கெல்லாம் இந்நாட்டின் வறுமையும் வேலையின்மையுமே அடிப்படைக் காரணம்.

பல முஸ்லிம் இளைஞர்களுக்கு வளைகுடாத் தொடர்பும் பணமும் உலகளாவிய இஸ்லாமிய தத்துவப் பரிச்சயங்களும், சில முதிர்ச்சியற்ற சாகசச் சித்திரங்களை ஊட்டுகின்றன.

ஆனால், பொதுவாக நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்:

ஒரு நாட்டின் சிறுபான்மையினர் தங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று கருதும் போது, பெரும்பான்மையாய்த் தங்கள் பிரிவினர் வாழும் நாட்டை ரட்சகர்களாக நினைத்துக் கொள்வது மனித இயல்பு.

ஆப்கானிஸ்தான் ஒரு காலத்தில் காந்தார நாடு; சகுனியின் தேசம். இன்று, முஸ்லிம் பழமைவாதிகள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் அங்குள்ள இந்துக்களுக்கு பாதுகாப்பில்லாத நிலை உருவாகியது.

அவர்கள் இந்துக்கள்தான்; இந்தியர்கள் அல்ல.

ஆனாலும், இந்தியர்களை அவர்கள் தங்கள் ரட்சகர்களாக நினைத்துக் கொள்ளவில்லையா?

சிறுபான்மை மக்கள், இனம், மதம், மொழி என்னும் மூன்று தளங்களிலும் எந்தப் பெரும்பான்மையோடு ஒத்துப் போகிறார்களோ, அங்கு இவ்வுணர்வு அதிகமாகவே இருக்கும்.

அந்த வகையில்தான் இந்திய முஸ்லிம்கள் பாகிஸ்தானைப் பரிவோடு பார்க்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் சென்று குடியேறிய உருது பேசும் முஸ்லிம்கள் இன்றுவரை அகதிகள் போலவே கேவலப் படுகிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்தாலும், அங்கே

படிப்பகம்

www.padippakam.com



முஸ்லிம்களில் ஒரு பிரிவினரான அகமதியாக்களின் தொழுகை இடங்களை, ஆளும் முஸ்லிம்கள் இடித்துத் தரைமட்டமாக்கி வெறியாட்டம் போடுகிறார்கள் என்பதை அறிந்த பின்னும் உளவியல் ரீதியாக அவர்கள் இவ்வாறு உந்தப் படுகிறார்கள்.

## 20. அரசியல்வாதியின் சித்து வேலை

ஓர் அரசியல்வாதியைப்போல் மற்ற மதங்களைப் பற்றிப் பேசி எனக்கொன்றும் ஆகப் போவதில்லை.

தேர்தலில் ஓட்டு வாங்க, சிறுபான்மையினர் நலம் பேசி நீலிக்கண்ணீர் வடிக்கத்தான் எத்தனை அரசியல் கும்பல்கள்!

அவர்கள் பேசி ஓயட்டும்.

இப்போது என் மக்கள் பிரச்சினை எனக்குப் பெரிது.

இந்து மதப் பழமைவாதிகள் ‘இந்து ராஜ்யம்’ அமைப்பதில் வெற்றி கண்டுவிட்டால், எம் மக்கள், சூழ்ச்சியையே வாழ்க்கையாகக் கொண்ட ஒரு சிறு கூட்டத்திற்கு நிரந்தரமாக அடிமைப் பட்டுக் கிடக்க நேரும்.

ஒரு ஜனநாயக நாட்டில் ஒரு சிறு கும்பல் நம்மை அடக்கியாள முடியுமா என்று ஒரு நண்பர்- மனிதாபிமானத்தில் நம்பிக்கையுள்ள ஒரு நண்பர் வெகு பாமரத்தனமாகக் கேட்டார்.



அரசியல்வாதிகள் தியாகசீலர்களாய், தூய சேவகர்களாய், சமூக ஒழுக்கவாதிகளாய் இருந்தால் கேட்கவேண்டிய கேள்வி.

இந்த நாட்டில் காசு வரும் என்றால், காலை நக்குகிற நாய்க் குட்டியாக வாயை மூடிக்கொள்கிறவர்கள்தானே ஒரு தலைவனின் கீழ் திரளும் அரசியல்வாதிகள்?

இவர்கள் துணையில்தான் சனாதனிகள் தங்கள் சாதனைகளைச் செய்து முடிக்கிறார்கள்.

இந்த மண்ணில் இந்து மதம் மட்டுமே இருப்பதானாலும் அரசு மதச்சார்பற்றதாகத்தான் இருக்க முடியும்.

இந்து மதத்தில்தான், உலகின் எந்த மதத்திலும் இல்லாத வேற்றுமைகளையெல்லாம் இறக்குமதி செய்து விட்டாயே?

உன் ‘இந்து ராஜ்யம்’ பலிதமானால் அதை ஆள்கிறவன்

எந்த சாமியைக் கும்பிடுகிறவன்?
எந்த ஜாதியில் பிறந்தவன்?
எந்த மொழியைப் பேசுகிறவன்?
எந்தக் கலாச்சாரத்தில் ஊறித் திளைத்தவன்?
எந்த வட்டாரத்தில் ஆடிக் களித்தவன்?
இதற்கெல்லாம் மேலாக,

படிப்பகம்

www.padippakam.com



எந்த இன வழியைப் பற்றிக்கொண்டிருக்கிறவன்?

இத்தனை வேற்றுமைகளையும் உள்ளடக்கித் தைத்தது தான் நீ நிறுவத் துடிக்கும் 'இந்துத்துவம்.'

இம் மாயையைச் சகித்துக்கொள்ள தற்காலிகமாகவேனும் தார்மீகப் பொறுப்பேற்பதுதான் மதச் சார்பின்மை.

இந்த நாட்டில் இன ஆதிக்கமும் மொழி ஆதிக்கமும் இல்லாத, கௌரவமான அதிகாரப் பரவலோடு கூடிய, அசலான மதச் சார்பின்மையின் அமலாக்கம்தான் நாட்டை ஒன்றாய் இணைத்திருக்கும்.

'இந்து ராஜ்யம்' என்பது இந்த நாட்டை 86 தேசங்களாக உடைத்துச் சிதறடிக்க மட்டுமே உதவும்.

ஏனெனில், 'இந்தியா' என்பது அன்னியன் திரட்டித் தந்த எள்ளுருண்டை. 'இந்து மதம், இந்துச் சட்டம்' என்பதெல்லாம் நிர்வாக வசதிக்காக அவன் தைத்துக் கொடுத்த ஒட்டுச் சட்டை.

இந்த எள்ளுருண்டை பொடிப்பொடியாய்ச் சிதறிவிடாமல் ஈர்க்கும் வெல்லப் பாகுதான் மதச் சகிப்பும் மனித நேசமும்.

அதை வெடி வைத்துத் தகர்க்க முயலும் நீதான் 'இந்தியா'வின் முதல் ராஜத் துரோகி.

இல்லாமலா, ''வடக்கே உள்ள ராமபக்தியின் மகத்துவம் பற்றி தெற்கே உள்ள காஞ்சி மடத்துக்காரர்களுக்கு என்ன தெரியும்?'' என்றுகேட்கத் தோன்றியது?

இதுபோல என்னென்ன கேள்விகள் எழும் என்பது எங்களுக்குத் தெரியாதா?

## 21. நாளை பற்றி நான் கொள்ளும் பயம்

இந்து மதம் வாழ்வியல் மதமாக இருக்கும் வரைதான் நான் சுதந்திமானவன்.

வர்ணாசிரம அரசியலான பின் நான் ஜடமான பிணம்.

ஒன்றுபட்ட இந்தியாவில் சுதந்திரமான இந்துவாக இருக்கவே விரும்புகிறேன்.

'இந்து' என்பது எனக்கு அடையாளப் பெயர் மட்டுமே.

அது இயலாமல் போனால், இம் மண்ணில் உன் இந்து ராஜ்யத் தூதரகம்கூட இல்லாமல் இருப்பதையே காந்திக்கு நான் செய்யும் கௌரவமாகக் கருதுவேன்.

—முற்றும்.

—வாசகர்களின் விமர்சனங்கள் இதழில் வெளியாகும்—

படிப்பகம்

www.padippakam.com



# காட்சியின் பிரதிமம் ஹைகூ

நெல்லை சு. முத்து

"இயற்கையினை அது உள்ளவாறு எழுது வாழ்க்கைக்கு உண்மையானவனாய் இரு" என்பதே ஹைகூ நயக்குக் கற்பிக்கும் பாடம்.

இருள் படிந்து உறங்கும் குளம்
திடீரெனத் தவளையின்
நீர்ச்சத்தம் [பாய்ச்சல்

-பாஷோ காட்டும் இச் சித்திரமே, உலகின் முதல் ஹைகூ.

காற்றில்லா அமைதி வேளை
அதோ பார்! அந்த பழுத்த இலை
தானே விரும்பி வீழ்கிறது

—பான்சோ தீட்டும் ஓவியமும்,

ஒற்றை இலை படபடக்கும்
அந்தோ! ஒற்றை இலை
படபடக்கும்
காற்றில் உதிர்ந்து விழும்போது

என்ற பேரிலான் கவிதையும் காட்சியின் சலனத்தை அப்படியே நம்முன் நிறுத்தும்.

## பதிவுகள்

தமிழ் ஹைகூக்களில் இப்பண்பு சற்றுக் குறைவேயாயினும் காட்சி நுணுகிப் படம் பிடித்தலும் (zoom-in), விட்டு விலகி விரிவடைதலைச் (zoom--out) சித்தரித்தலும் சிறப்பாகவே பதிவாகியுள்ளன.

"சப்தம் வரையும் காட்சி
பாம்பின் வாய்க்குள்
போகும் தவளை"
(புல்லின் நுனியில் பனித்துளி)

என ஹைகூ விழிகள் தொலைவிலிருந்து பாம்புவாய்த் தவளையை நெருங்கிப் பார்க்கின்றன.

"வல்லூறு வாயில்
வெள்ளைப் புறாவின்
வதனைக் குரல்
வெந்தழியுது வசந்தம்"
(உலக அமைதி நோக்கி) என்கிறது ஒரு பாடல்.

அழகான வண்ணச் சுவர்
மின்மினி
சுவரில் பல்லி (தீவின் தாகம்)

புதுவை. தமிழ்மணியின் படப்பிடிப்பு இது (zoom-in).

ஆயினும் மீன்கள் மட்டுமே இந்த வகை ஹைகூக்களில் அகப்பட்டுள்ளன.

"வானம் முழுக்கப் பறவைகள்
பறவைகள்
ஓ! தூரத்து ஏரியில்
மீன் அறுவடை"
புல்லின் நுனியில் பனித்துளி)

"கடலில் வலை வீசும் மீனவன்
கரையில் மீன் கொத்தி
முதலாளி" (சூரியச் செதில்கள்)

"சுட்டு வீழ்த்திய
கொக்கின் அலகில்
துடிக்கும் மீன்
(சூரியச் செதில்கள்)

"அமைதியாய் நின்றது கொக்கு
அதன் அலகில்
அவசர மீன்."
(ஓம் சக்தி, செப்டம்பர் 1988)

படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறே,

''மஞ்சள் கரு சூரிய நெருப்பு
வெள்ளைக் கரு வாயுமண்டலம்
அண்டம் முட்டை''

(நட்சத்திர விழிகள்)

என்கிறபடி சூரியன், விண்வெளி அண்டம் என்று விரிவடையும் (zoom out) காட்சி நிலை,

''தவளை முழக்கம் கேட்டு
புற்றின் வாயில் நா நீளும்
வானில் வட்டமிடும் பருந்து''

''வயலில் நண்டுகள்
சேற்றில் கொக்குகள்
வரப்பில் வேட்டைக்காரன்''

(தீவின் தாகம்)

என்றெல்லாம் புதுவை. தமிழ் நெஞ்சன்-சீனு. தமிழ்மணிசகோதரரால் ஹைகூக்களாயிற்று.

''காலை வணக்கம் சிட்டுக்குருவி
பெருக்கிய முற்றத்தில்
எழுதுகிறாயா?
பனிபடிந்த கால்களால்''

என்றார் ஜப்பானிய ஷிகி.

''கரைமணல் முதுகில்
அலைபோட்ட கோலத்தில்
புள்ளியா குத்துது காக்கை''

என்கிறார் கவிஞர் அமுதபாரதி

(புள்ளிப் பூக்கள்)

## ஹைகூ படிமங்கள்

இயற்கையின் ரசிப்பைப் படிமங்களினூடே கவிதைகளாக்கும் சிறந்த பாக்களும் தமிழில் உண்டு.

முட்டை கொண்டு
திட்டை ஏறும் எறும்புகள்
அவன் எழுத்துக்கள்

(பால் வீதி)

எனினும் மித்ராவின் ஹைகூக்களில் இத்தகைய கவிதைகள் ஏராளமாகத்தான் வருகின்றன:

''மல்லிகைச் செடியே!
கடனாகக்கொடு
திருப்பித் தந்துவிடுவேன்
கவிதைஎழுத சிலஎழுத்துக்கள்''

''தற்செயலாய் ஒரு கவிதை
மடிந்த அலையில்
நீந்தும் மீன்கள்''

''மின்கம்பிகளில்
பறவைகள்
அடடே! நல்ல ஹைகூ''

''ஒரே வரி கவிதைதான்
ஆனாலும் என்ன அழகு
ஏரிக்கரையில் ஆடுகள்''

''உற்றுப் பார்த்தால் தெரியும்
ஆற்று மணல்கள் எழுதும்
அழகிய கவிதைகள்''

''மரணக் கவிதை
அந்திக் காற்று
ஈசல் இறகுகள்.''

ஆனாலும் சொசேகி என்கிற ஜப்பானியக் கவிஞரின் சென் மனநிலை நம்முள் எழும்போதே ஈடற்ற படிமங்கள் கவிதையில் கருக் கொள்ளும்

''வண்ணத்துப் பூச்சியே என்
தூரிகை
உதிர்க்கும் சொற்கள்
மலர்களல்ல
அவற்றின் நிழல்கள்

அமுதபாரதி கூறுவதுபோல,

''பார்க்கச் சிறு மூட்டை
பிரிந்து பரவினாலோ 'பாரசூட்'
'ஐக்கூ'வின் முடிச்சு.''

## உவமைஹைகூக்கள்

உவமையும் உருவகங்களும் பின்னிய கதம்ப ஹைகூக்கள் தமிழின் மதுரக் கவிதைகள்.

படிப்பகம்

www.padippakam.com



ஆயினும் இந்த வியாபகம் பல கவிஞர்களிடம் ஒருவர் மாதிரி மற்றொருவர் எழுதியது போன்ற, இயல்பாக நிகழ்ந்த, அல்லது அவரவர் அறிந்திராமலே நடந்துவிட்ட விபத்தாகக்கூடத் தென்படுகிறது.



''உதிர்ந்து விழுந்த மலர்
கிளைக்குத் திரும்புகிறதா
இல்லை; வண்ணத்துப் பூச்சி''

மோரிதாகி எனும் ஜப்பானிய கவிஞரின் பிரபலமான இந்த ஹைகூ சொல்லிலும், வெளிப்பாட்டு முறையிலும், 'விரிந்த பூ மீண்டும் மரம் புகா'' எனும் சிவவாக்கியச் சித்தர் கருத்தின் பாற்பட்டதே.

''வானமும் பூக்குமா
உதிர்ந்து உதிர்ந்து
வண்ணத்துப் பூச்சி'' (தீயின் பிணம்)என்கிறார் ஒரு கவிஞர்.

தவிர கொக்கும் காகமும், நிலவாக, இரவாக, மேகமாக வெல்லாம் தோன்றின பலருக்கு.

''அந்திக்குப் பாருங்களேன்
குறும்புத் தனத்தை
கருப்பாய் பறக்கும் கொக்குகள்
(புல்லின் நுனியில் பனித்துளி)

''கொக்கின் இறகா
வானில் தவழ்வது
நிலாப் பிறை''
(புள்ளிப் பூக்கள்)

''குளக்கரையில்
கொக்குகள்... அட
மண்ணிலா மேகங்கள்''
(தே.சுப்பிரமணியன், கணையாழி, மார்ச், '91)

''மேகங்களுக்கும்
சிறகுகளா
காகங்கள்'' (தீயின் பிணம்)

தவிர,
''கல்லறைக்கும் உணர்ச்சிகளா
மேலே சிலிர்க்கும்
புற்கள்'' (தீயின் பிணம்)
எனவும்,

''கடல் நெடுக
மயிற் பீலிகள்
தூரத்தில் இயந்திரப் படகு''
(ஹைகூ கவிதைகள்)

எனவும்,

''வெள்ளம் சுற்றிய பம்பரம்
பாறைக் குழிகளில்...பார்
கூழாங்கல்''(ஹைகூ கவிதைகள்)
எனவும் வரும் உவமை ஹைகூக்கள் தமிழில் அனேகம்.

யதார்த்தமான ஜப்பானிய ஹைகூ சி.மணியின் மொழிபெயர்ப்பாக இப்படி:

புதிர் வெளிக் கதவு
அதற்குப் பூட்டாய்
இந்த நத்தை
(நடை, அக், 68)

மித்ராவின் மறு ஹைகூ இது:—

''மௌனம் திறக்க சாவி
அல்லி மொட்டின் மேல்
அழகிய தும்பி''
(ஹைகூ கவிதைகள்)

## வியப்புணர்வு ஹைகூ

அழகுணர்வின் ஆச்சரிய மேலீட்டால் 'ஓ இதுவா' என்பது போன்ற புறவடிவக் கவிதைகளுக்குரிய எடுத்துக் காட்டுகள்:

''சூறாவளி
வெள்ளைக் காகிதங்கள்
ஓ... நாரைகள்''
(தீயின் பிணம்)

படிப்பகம்

www.padippakam.com



''அழகாய் இருந்தது அல்லி
மொட்டு
யாரதை உள்ளே இழுத்தது
ஓ .. தண்ணீர்ப் பாம்பு''
(ஹைஹ்கூ கவிதைகள்)

''மகிழ்ந்தது மகிழ்ந்தது
சிலந்திப் பூச்சி
ஓ . மழைத் துளி''
(ஹைகூ கவிதைகள்)

''முறுக்கிய கயிறு
தளர்கிறதே! ஓ!
ஜெட் புகை''

இதே வியப்பு அல்லது ஏமாற்ற உணர்வு உத்தியினைப் பின்பற்றி அறிமுகக் கவிஞர் சிலர் ஹைகூ எழுதினர்.

''காற்றில் அசையுது
கர்ப்பப் பை
தூக்கணாங் குருவிக் கூடு''

என்கிறார் ஒரு கவிஞர். (சந்திர சேரன், கிழக்கு, செப்-அக்'91)

எனினும் புதுவை தமிழ் நெஞ்சனின் இந்த ஹைகூ நன்று:

''அந்தக்குடிசையில் புகைகிறதே
வறுமை மடிந்து விட்டதா
ஓ .. மார்கழி தொடக்கம்''
(தீவின் தாகம்)

தமிழ்மணி(31-8-91) சங்கப் பலகையில் இரா வீரராகவன் மேற்கோள் காட்டும் ஹைகூ இது.



''ஊரெங்கும் பவர்கட்
எந்திரங்கள் இயங்குகின்றனவே
ஓ...பெண்கள்''

அவ்வாறே 3-8-91 தமிழ் மணியில் மீனாதாஸ் ஹைகூ:

''விறகு வெட்டிக்குப் பயந்தா
மரங்கள் ஓடுகின்றன
ஓ .. பஸ் பயணம்''

தமிழ்நெஞ்சனின் உள்ளம்:

''அந்த நாவற்பழம்
சுட்ட பழமாகாமல் சுடாத
பழமாய்
ஓ . கருவண்டு''

என்று தன்னிறைவு கொள்கிறது. ஜப்பானிய மொழியைப் போலவே தமிழிலும் இந்த 'ஓ!' ஹைகூக்கள் மிகுதிதான்.

## தற்குறிப்பேற்றவை

மேலும் பெரும்பாலான ஹைகூக்களில் தற்குறிப்பேற்ற அணியாகப் பயின்றுவரும் உருவக அமைதியும் தமிழில் காணலாம்.

''ரீங்கார வண்டு
மலர்களைப் பண்டமாற்று
செய்யும்
வண்ணத்துப் பூச்சிகளுடன்''

தாய்கியின் இந்த ஹைகூ மாதிரியே, வண்ணத்துப் பூச்சியின் செயலுக்கு கவிஞர் தன் குறிப்பினை ஏற்றிப் பாடக் கேட்கிறோம்.

''வண்ணத்துப் பூச்சிச் சீமாட்டி
சிறகிற்கு மணம் ஊட்டுகிறாள்
மலர்களில் அமர்ந்து''

பாஷோ கருத் தோட்டத்தினோடு இயைந்து வரும் தமிழ் ஹைகூ இது:

'மலர்ந்து மணக்காத மலர்களில்
கண்ணீர்த் துளிகள்...
கைக்குட்டையாக வண்ணத்துப்
பூச்சி'
(தமிழ்மணி: 31-8-91)

''ஒளியைக் குடித்து
இலைகள் பறக்கும்
தும்பீ தும்பீ''

www.padippakam.com



(கணையாழி ஆகஸ்டு '69) என்பது சந்திரலேகாவின் ஆங்கில ஹைகூ.

''ஏனிந்த கூக்குரல்
தலையில் தீப்பற்றிக்
கொண்டதோ
செங்கொண்டைச் சேவலே''

என்றும்,

''கல்லால் பட்ட வலியைக்
கூறவே
கரைவரை செல்கின்றன
நீரில் வளையங்கள்''

என்றும்,

''கண்ணாடியிலும் முளைக்
குமா ரோமம்?
நீர் நிறைந்த வயலெல்லாம்
நிமிர்ந்தன நாற்றுக்கள்''

என்றும், 'புள்ளிப் பூக்களில்' மீட்டுகிறார் அமுதபாரதி.

''இருட்பகை இரவி இருள் எனத் தம்மையும் கருதி காய்வனோ?'' என்று அஞ்சும் காகத்தினை மனோன்மணிய நாடகத்தில் நடராஜன் காணகிறான்.

''இளங்காலைப் பொழுது
மேனி இருட்டையா கழுவும்
நீர் குளிக்கும் காக்கை''

எனவும்

''பட்ட மரக் கிளைகள்
கிளைகளின் பசிய இலைகளாய்
பச்சைப் பசுங்கிளிகள்'' [ஓ

எனவும்,

''கனவுகள் கற்பனைகள்
காகிதத்தில் மட்டுமா பரவும்?
கல்லால் விரியும் அலை''

எனவும் ''காற்றின் கைகளி'' லும் அமுதபாரதி தம் குறிப்பேற்றி ஹைகூ புனைகிறார்.

''விரலைத் தொட்டேன்
மின்சாரம்! இதயத்துள்
யார் துணி துவைப்பது?''

(புள்ளிப் பூக்கள்) என ஆச்சரியப் படுபவரும் இவரே.

மித்ரா,

''அந்தக் குயில் இவ்வளவு தூரம்
புலம்பியிருக்கக் கூடாதுதான்.
அழுகிறது பன்னீர் மரம்''

என்று இயற்கையில் மரம் உதிர்த்த பன்னீர்த் துளிகளைக் கண்ணீர்த் துளிகளாக்கி இருக்கிறார்.

''சூரியச் சுடர் சுட்டுவிட்டதோ
புல்லின் கண்களில் தேங்கும்
கண்ணீர்த் துளி''

(இலையுதிர் காலம் நிரந்தரமல்ல) என்பார் கவிஞர் பரிமள முத்து.

''வெளியே குளிரில்...
புல்லுக்கு மட்டும்
வியர்த்தது எப்படி''

(நடனமலர்) இப்படி ஒருவர்.

''சோர்வின்றித் துணி
துவைக்கிறது.
அதோ.. அந்த
உப்பனாற்று நண்டு''

(ஹைகூ கவிதைகள்)

மேலும்,

''நினைத்த வார்த்தைகளை
நினைத்தபடி உச்சரிக்கும்
ஓடும் ரயில்''

என்பதுகூட- வானில் தவழும் மேகங்களின் தோற்றமும், சுவரில் பெய்த மூத்திரக் கறையும் அவரவர் கருத்தோட்டத்திற்கேற்ப வெவ்வேறு சித்திரங்களாய் விரிகின்ற 'பிகாஸோ'' மனநிலையில் எழுந்ததுதானே!

''தண்ணீர் மத்தாப்பூ
குளித்துச் சிலிர்க்கும்
காக்கைகள்''

(ஹைகூ கவிதைதள்)

மித்ராவின் இந்த 'மத்தாப்பு'—கழனியூரான் ஹைகூவிலும் வருகின்றது.

''எப்போதும் மத்தாப்பு
கொளுத்தி விளையாடுகிறது

படிப்பகம்

www.padippakam.com



மலையருவி''
(நட்சத்திர விழிகள்)

''ஏய் யாரங்கே ஆற்றில்
பாலைக் கொட்டிவிட்டு
ஓலமிடுவது
நீர் வீழ்ச்சி''(கூடைக்குள்தேசம்)

என்பது ஒரு புறமிருக்க,

''அருவி நீர்
பாறையில் மோதி மோதி
சிதறியது பாறை''

(இலையுதிர் காலம் நிரந்தரமல்ல) என்பார் ஒரு கவிஞர்.

## உருவக ஹைகூக்கள்

இந்த மலையருவியினை அமுதபாரதி காட்டும் உருவம் பழையதுதானே.

''நடக்க முடியாமல்
தாரை தாரையாய்க் கண்ணீர்
மலை வடிக்கும் அருவிகள்''

''மலைகளுக்கும் வியர்க்குமோ?
வியர்க்கும், வியர்க்கும்;
வியர்வை வரும்
வழிந்தோடும் அருவி''

ஏற்கனவே பனிமலையினை மார்பின் வெள்ளைக் கச்சைக்கு உவமித்த புதுக் கவிதை ஒன்றுண்டு.

''யாவர்க்கும் அமுதூட்ட
திறந்த மார்புடன்
காத்திருக்கிறாள்
மலைராணி''
(நட்சத்திர விழிகள்)

என்கிறது ஒரு ஹைகூ.

அவ்வாறே,

''நிலத்தைக் கொத்தினான்
ஈரம் கசிந்தது
உடலில்''

(தமிழ் மணி, 3-8-91) என்பதும் புதிய சிந்தனை இல்லை.

மலைக் காடெல்லாம் சுற்றித் திரியும் ஹைகூ தன் கருத்துப் பாய்வுகள் சிலந்தி வலையிலும் சிக்கி விடுவதுண்டு.

''சர்க்கஸ் கோமாளி! வந்துபார்
அச்சமின்றிக் குதிக்கிறது பூ
சிலந்திவலையில்''
(ஹைகூ கவிதைகள்)

கவிஞனின் படிம உணர்வு பளிச்சிடும் இக்கவிதைக்கு மாறான முரண்பாடுடையது இன்னொரு ஹைகூ.

''சிலந்தி கட்டிய வீடு
சிறைகளாகின்றன
கொசுக்களுக்கு''
(நட்சத்திர விழிகள்)

அவ்வாறே,

''முடியெல்லாம் உதிர்ந்தன
வழுக்கைத்தலையின் பளபளப்பு
எப்போ(து) உதிர்ந்தது நிலா''
(காற்றின் கைகள்)

என்று ஏகடியம் செய்யும் கவிஞரே

''இலைகள் எப்போது
எண்ணெய் குளித்தன?
நிலவின் பளபளப்பு''
(புள்ளிப் பூக்கள்)

என்றும் வியந்தவராகிறார்.

—இன்னும் வரும்



## அறிவிப்பு

அடுத்த இதழிலிருந்து கதைகளும் கவிதைகளுமாக வழக்கமான அம்சங்களுடன் விவாதத்துக்குரிய தலையங்களும் தாங்கி வெளி வரும்.

—ஆசிரியர்

www.padippakam.com

தொடர் 2

## வல்லிக்கண்ணன்

# நினைவுத் தடங்கள்

**1943** டிசம்பரில் ஒரு நாள் நான் 'நவசக்தி' அலுவலகத்தில் இருந்தபோது, வ. ரா. வந்தார்.

'நவசக்தி' துணை ஆசிரியர் கே. ராமநாதனும், துறையூரிலிருந்து வெளிவந்த மறு மலர்ச்சி இலக்கிய இதழான 'கிராம ஊழிய'னின் நிர்வாக ஆசிரியர் திருலோக சீதாராமும் அப்போது அங்கே இருந்தார்கள்.

வ. ரா. 'நவசக்தி' யில் தொடர்ந்து கட்டுரை எழுதி வந்தார். அந்த மாதத்துக்கு உரிய கட்டுரைப் பிரதியை கொடுப்பதற்காக அவர் ஆபீசுக்கு வந்து சேர்ந்தார்.

வ. ரா. என்று பிரபலமாகத் தெரிய வந்திருந்த வ. ராமஸ்வாமி அய்யங்கார் பாரதியாருடன் புதுச்சேரியில் சிறிதுகாலம் வாழ்ந்தவர். பாரதியின் சீடர், பக்தர். பாரதி புகழைப் பரப்புவதில் தீவிர ஆர்வம் கொண்டிருந்தவர். பாரதிக்கு 'மகாகவி' என்ற அந்தஸ்தை நிலை நாட்டுவதற்காக தீவிரமாக வாதாடி வெற்றி கண்டவர்.

இந்த சமயத்தில், வ. ரா. எழுதிய 'மகாகவி பாரதியார்' என்ற நூல் வந்திருக்கவில்லை. அவர் 'மணிக்கொடி'யில் எழுதிய 'நடைச் சித்திரம்' கட்டுரைகளும், 'மழையும் புயலும்' சிந்தனைக் கட்டுரைகளும் ஏற்கனவே நவயுகப் பிரசுராலயம் வெளியீடுகளாகப் பிரசுரம் பெற்றிருந்தன. அவை வெளிவந்த புதுசிலேயே அவற்றை நான் படித்திருக்கிறேன்.

'நடைச் சித்திரம்' தமிழில் புதுமையான முயற்சி; ஆங்கிலத்தில் ஏ. ஜி. கார்டினர் எழுதிய 'கேரக்டர் ஸ்கெட்சஸ்' போல், தமிழில் வ. ரா. எழுதிய குணச்சித்திர விவரிப்புகள் அவை. கதை அம்சம் சிறிது கொண்ட வர்ணனைக் கட்டுரைகள். சாதாரண மனிதர்களைப் பற்றியவை. அங்காடிக்காரி செங்கமலம், கான்ஸ்டபிள் சுப்பையா, காவல் காத்தான் என்று சமூக வாழ்வில் காணப்படுகிற பலரையும் பற்றி வ. ரா. சுவாரஸ்யமாக வர்ணித்து எழுதியிருந்தார்'

அதே போல, சமூகத்திலும் வாழ்க்கையிலும் மண்டி வளர்ந்த குறைபாடுகளையும் கோளாறுகளையும் எடுத்துச் சொல்லி, அவை

படிப்பகம்

www.padippakam.com



திருத்தப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் சிந்தனைக் கட்டுரைகளையும் வ. ரா. எழுதிப் புகழ் பெற்றிருந்தார். அவற்றில் பல தொகுக்கப்பட்டு 'மழையும் புயலும்' என்ற தலைப்பில் புத்தகமாகியிருந்தன.

தி. ஜ. ர. என்று அறியப்பட்டிருந்த தி. ஜ. ரங்கநாதனை ஆசிரியராகக் கொண்டு வை. கோவிந்தன் நடத்திய 'சக்தி' மாதப் பத்திரிகையிலும் வ. ரா. வின் கட்டுரைகள் வந்து கொண்டிருந்தன. அவற்றின் பாணியில்தான், தமிழ் நாட்டின் குறைபாடுகள், சமூக சீர்கேடுகள், கல்வியில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றி எல்லாம் 'நவசக்தி'யிலும் அவர் கட்டுரைகள் எழுத இசைந்திருந்தார்.

ராமநாதன் என்னை அவருக்கு அறிமுகம் செய்தார். வ.ரா. என்னை கவனித்தார்.

'எழுத்தாளனாக வளரணும்கிறதுக்காக நீர் வீட்டைவிட்டு வெளியேறினீர்னு சக்திதாசன் சொல்லியிருக்கிறார். அது நல்ல காரியம். அப்படி உறுதியோடு கிளம்புகிறவங்கதான் எழுத்துக்கும் தமிழுக்கும் உருப்படியாக ஏதாவது பண்ண முடியும். நீர் நன்றாக வளரணும். வீடு, சுகவாழ்க்கைன்னு ஆசைப்பட்டு நீர் திரும்பிப் போகாமல் இருக்கணும். மன உறுதியோடு ஊக்கமா உழைக்கணும். அது முக்கியம்' என்றார். என் படிப்பைப் பற்றி விசாரித்தார். சில நல்லுரைகள் கூறினார்.

எல்லோரோடும் உற்சாகமாகப் பேசினார். உரத்த குரலில் உற்சாகமாக உரையாடுவதும், வாய்விட்டு உரக்கச் சிரிப்பதும், மற்றவர்களும் அப்படி கவலையற்றுச் சிரிக்க வேண்டும் என்று உற்சாகப்படுத்துவதும் வ.ரா. வின் பண்புகளில் சில.

வ. ரா. எழுதிய 'தமிழ் பெரியார்கள்' என்ற புத்தகம் அடுத்த மாதம் வெளிவந்தது. சின்ன அண்ணாமலையின் 'தமிழ்ப் பண்ணை' அதை அழகாக வெளியிட்டிருந்தது. தமிழ் பெரியார்கள் வரிசையில், எஸ். எஸ். வாசன், 'சுதேசமித்திரன்' ஆசிரியர் சி. ஆர். சீனிவாசன்' இசை அரசி கே. பி. சுந்தராம்பாள், நடிகர் என். எஸ். கிருஷ்ணன் முதலிய பலரைப்பற்றி, அவருக்கே உரிய உற்சாகத்துடன், பாராட்டி எழுதியிருந்தார் வ. ரா.

கே. பி. சுந்தராம்பாளையும், என். எஸ் கிருஷ்ணனையும் தமிழ் நாட்டுப் பெரியார்களாக்கி புகழ்ந்து பாராட்டி வ. ரா. எழுதியது அந்நாட்களில் பல பேருக்குப் பிடிக்கவில்லை. அதனால் வ. ரா. வை குறை கூறியும், 'தமிழ் பெரியார்கள்' புத்தகத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அநேகர் பேசினார்கள்; எழுதினார்கள். அவ்வேளைய சிறு சலசலப்பு- அவ்வளவுதான்.

நான் அம்முறை மூன்று மாதங்கள்தான் சென்னையில் இருந்

படிப்பகம்

www.padippakam.com



தேன். அச்சமயம் திருலோக சீதாராமுடன், நுங்கம்பாக்கத்தில் வசித்த வ.ரா.வின் வீட்டுக்கு இரண்டு தடவைகள் போனது உண்டு.

திருலோக சீதாராம், 'கிராம ஊழியன்' மாதம் இருமுறை இதழின் பொங்கல் மலர் வெளியிடத் திட்டமிட்டிருந்தார். அதற்குத் தேவையான கதைகள், கட்டுரைகள், விளம்பரங்கள், சேகரிப்பதற்காக அவர் சென்னையில் தங்கியிருந்தார். ஊழியனின் ஆசிரியர் பொறுப்பு வகித்த கு.ப.ராஜகோபாலனும் சென்னைக்கு வந்திருந்தார் என்றும், ஒரு வாரம் இருந்த பின் அவர் கும்பகோணம் போய்விட்டார் என்றும் திருலோகம் தெரிவித்தார்.

'இரண்டு நாட்களுக்கு முன்னேதான் கு.ப.ரா. கும்பகோணம் போனார். இரண்டு நாட்களுக்கு முன்னாடியே நீங்க சென்னை வந்திருந்தால் கு.ப.ரா.வையும் பார்த்திருக்கலாம்' என்று அவர் குறிப்பிட்டார்.

கு.ப.ரா.வை நான் பார்த்ததில்லைதான். பின்னர் நான் துறையூர் போய் 'கிராம ஊழிய'னில் சேர்ந்த ஒரு மாதத்தில் அவர் துறையூருக்கு வந்தார். அப்போதுதான் நான் அவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதுதான் முதல் சந்திப்பு. அதுவே கடைசி சந்திப்பாகவும் முடிந்து போயிற்று. 1944 மார்ச் மாதம் கு.ப.ரா. வந்து போனார். கும்பகோணம் திரும்பிய சில நாட்களிலேயே அவர் இறந்துவிட்டார்.

பிரபல எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் எவரையும் நான் கண்டு பேசியதில்லைதான். அது ஒரு குறையாகவும் எனக்குப் பட்டதில்லை. என் போக்கில் நான் படித்துக் கொண்டும் எழுதிக் கொண்டுமிருப்பதையே பெரிதும் விரும்பினேன். அதுவே எனக்குப் பிடித்தமானது. இப்பவும்கூட...

முதன் முதலாக நான் கண்டு பேசிய எழுத்தாளர்— பத்திரிகை ஆசிரியர்—பரமக்குடிக்கு என்னைத் தேடிவந்த சக்திதாசன் சுப்பிரமணியன்தான். அது நிகழ்ந்தது 1939இல்.

அதன் பிறகு நான் பார்த்துப் பேசிய பெரிய எழுத்தாளர் ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார். 1941 கடைசியில் அவரை அவருடைய வீட்டில் போய்ப் பார்த்தோம்—நானும் தி.க. சிவசங்கரனும் வேலாயுதம் என்ற நண்பரும்.

அப்போது நான் திருநெல்வேலியில் இருந்தேன். டி.கே.சி. தாமிரவர்ணி ஆற்றை ஒட்டிய வண்ணார்பேட்டை என்ற ஊரில் வசித்தார்.

டி.கே.சி.யின் கட்டுரைகள் 'ஆனந்த விகடன்' தீபாவளி மலர், 'கலைமகள்', 'சக்தி' முதலிய பத்திரிகைகளில் வந்துகொண்

படிப்பகம்

www.padippakam.com



டிருந்தன. அவற்றைப் படித்து ரசித்தவர்கள் நாங்கள்.

முக்கியமாக, 1936ஆம் வருட விகடன் தீபாவளி மலரில் இடம் பெற்றிருந்த டி. கே. சி. கட்டுரை 'இதயஒலி' என்னை வெகுவாக ஈர்த்திருந்தது. அதனால், 1936 இல் நான் ஆரம்பித்த கையெழுத்துப் பத்திரிகைக்கு 'இதயஒலி' என்று பெயரிட்டேன்.

'இதயஒலி' என் லட்சியப் பத்திரிகை. பல வருடங்கள் அதை நான் வளர்த்தேன். வெவ்வேறு ஊர்களில் நான் வசிக்க நேர்ந்த போதும் 'இதயஒலி' மாதந்தோறும் தயாரிக்கப்பட்டது. சுதந்திர எழுத்தாளனாக நான் சென்னையில் வசிக்கத் தொடங்கிய பிறகும் அநேக வருடங்கள் அந்தக் கையெழுத்து இதழ் உருவாக்கப்பட்டது. என் இஷ்டம் போல் எனக்குப் பிடித்தவாறெல்லாம் அதில் எழுதி வைத்தேன். 'இதயஒலி' என் பயிற்சித் தளமாகவும் சோதனைக் கூடமாகவும் திகழ்ந்தது. அதில் வருவதை எல்லாம் படித்து ரசிக்கவும் வியந்து பாராட்டவும் ஒரு சில நண்பர்கள் இருந்தார்கள்...

டி. கே. சி எழுத்தில் எனக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. ஆகவே, டி. கே. சி.யை பார்க்கப் போகலாம் என்று தி. க. சிவசங்கரனும் வேலாயுதமும் கூப்பிட்டதும் நான் உற்சாகமாக அவர்களோடு போனேன்.

அந்தச் சந்திப்பு என் மனசில் அழுத்தமாகப் பதிந்துவிட்ட இனிய அனுபவமாக அமைந்தது.

—வளரும்

---

## பிழை திருத்தம்

ஜனவரி, 1993 இதழில் ''நினைவுத் தடங்கள்'' தொடரில் 28ஆம் பக்கம் 36ஆம் வரியில் 'பராசக்தி' என்று வரும் சொல்லை 'பாரதசக்தி' எனவும், 30ஆம் பக்கம் 30ஆம் வரியில் 'தொடங்கியிருந்த' என அச்சாகியுள்ளதை 'த்ங்கியிருந்த' எனவும் திருத்தி வாசிக்க வேண்டுகிறோம். கவனக் குறைவுக்கு வருந்துகிறோம்.

இதழில் ஆங்காங்கே நேர்ந்து விடும் எழுத்துப் பிழைகளையும் களைய முயல்கிறோம். —ஆசிரியர்.

படிப்பகம்

www.padippakam.com

# மனிதன் ஏழை மனிதனா?

—டாக்டர் நா. மகாலிங்கம்—

மக்கங்கள்: 025 விலை ரூ 47
வானதி பதிப்பகம், தீனதயாளு தெரு: சென்னை-600017

''பண்பாட்டினால் மனிதன் உயர்கிறான். அப்படி அவன் உயர்வதற்குத் தேவையான பொருள்கள் கிடைக்கும்படி சமூக நிலையை உயர்த்தி அமைத்தாக வேண்டும்.

இன்றைய மனிதனுக்கு அறிவையும், உற்சாகத்தையும், தைர்யத்தையும், அன்பையும், தியாகத்தையும், கூடி வாழும் தன்மையையும், அடக்கத்தையும், தெய்வ நம்பிக்கையையும், உழைப்பின் ஆர்வத்தையும், சத்தியத்துடன் வாழ்வதிலும் பேசுவதிலும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி ஆகவேண்டும்.''

இந்த நோக்குடன் பொள்ளாச்சி அருட்செல்வர், டாக்டர் நா. மகாலிங்கம் 'வாழ்வின் சகல துறைகளிலும் தன் கவனத்தைச் செலுத்தி, சிந்தனை வளர்த்து, பயனுள்ள கருத்துக்களை கட்டுரைகளாகப் பதிவு செய்திருக்கிறார்.

''தனி மனிதன் தான் வாழும் சமுதாயத்தை மனதில் கொண்டு தன் லட்சியத்தில் அதை அமைத்துக் கொள்ள வேண்டும்.

தான் முன்னேற வேண்டும் என்ற லட்சியம் இல்லாத மனிதனால் சமுதாயத்தை முன்னேற்ற முடியாது.

## நூல் நலம்

தனி மனிதன் முன்னேறினால்தான் சமுதாயம் முன்னேற முடியும். சமுதாய முன்னேற்றமும் தனி மனிதனின் முன்னேற்றமும் ஒன்றுக்கு ஒன்று உதவி செய்து கொண்டு வளர்கின்றன, நாகரிகமும் உருவாகிறது.

இதற்கு, தனி மனிதனின் உள்ளத்தில் ஒளி உண்டாக வேண்டும்.

சமுதாயத்தை உயர்த்துவது பற்றி ஓயாமல் சிந்திப்பதன் மூலமாகவும், சொல்லியதைச் செயல் படுத்துவதன் மூலமாகவும் ஏற்படுவதுதான் உள்ளத்தில் தோன்றும் உண்மை ஒளி ஆகும்.''

இத்தகைய உண்மை ஒளி பெற்றவர் திரு. மகாலிங்கம் என்பதை இத்தொகுப்பில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் வெளிப்படுத்துகிறது அவருடைய சமூக நோக்கை, நாட்டுப்பற்றை, தாய்மொழி உணர்வை, ஆன்மீக நாட்டத்தை மனித வாழ்வு வளம் பெற வேண்டும் என்ற எண்ணத்தை இக் கட்டுரைகள் புலப்படுத்துகின்றன. அவர் சிந்தனைச் செல்வர் என்பதையும் இவை உணர்த்துகின்றன.

டாக்டர். மகாலிங்கத்தின் கட்டுரைகள் சமூக, அரசியல் மற்றும் தற்கால வாழ்க்கை குறித்த சீரிய விமர்சனங்களாகவும், குறைகள் களையப் பெற்று வாழ்க்கை வளம்

www.padippakam.com



பெறுவதற்கும், நாடும் மக்களும் முன்னேறுவதற்குத் தேவையான யோசனைகளைக் கூறும் நல்லுரைகளாகவும் விளங்குகின்றன.

''பொற்காலமாக விளங்கிய ஒரு கால கட்டத்தில் என் தந்தை வாழ்ந்தார். அரசியலில் கண்ணியமும், சமூகத்தில் சமரசமும், இறை உணர்வும் ஒளிவீசிய காலம் அது. காந்தியம் எல்லாத் துறைகளிலும் புகுந்து மனிதர்களை புடம் போட்டு பொன்னாக்கிய காலம். கோயில் மணிகள் கலங்கமற்று ஒலித்த காலம். காற்றில் துவேஷங்கள் பரவாத காலம். எல்லாவற்றுக்கும் மேலாக தேச விடுதலைப் போர் தொடங்கியிருந்த காலமும் அது.''

இப்படி தன் தந்தையார் காலத்தை வியந்து கூறும் திரு. மகாலிங்கம் தற்கால நிலையை உள்ளது உள்ளபடி விமர்சிக்கிறார்—

''காந்திஜியின் தளபதிகளாக இருந்தவர்களே... ஆடம்பரமாக வாழ்கிறார்கள். அரசியல் சதிகளைப் புரிகிறார்கள், அரசியல் துவேஷத்தால் ஒருவரை ஒருவர் கவிழ்க்க இடைவிடாது முயலுகிறார்கள்...

பொய்யையே அரசியலாகக் கொண்டிருக்கிறோம். மோசடியையே வாழ்க்கை நியதியாக மாற்றிக் கொண்டு வருகிறோம். அநாகரிகத்தையே நாகரிகமாக்கிக் கொண்டு வருகிறோம். பணப் பேராசையும் அதிகார வெறியும் கொண்டு அலைகிறோம். ஒழுக்கமாக நடப்பவர்களைப் பார்த்து பரிகசிக்கிறோம். ஒழுக்கக்கேடாய் அலைவதை நியாயம் என்கிறோம். வாழ்க்கை நரகமாகப் போய்க் கொண்டிருக்கும் காரணத்தை ஆராய்ந்து பார்க்கவே அஞ்சுகிறோம்.''

இந்நிலை மாறுவதற்கு, தேசபக்தியுடனும், ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உணர்வுடனும், நாட்டு மக்களின் நல்வாழ்வை மனதில் கொண்டும், நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முயல வேண்டும் என்று குறிப்பிடும் அருட்செல்வரின் சீரிய சிந்தனை முயற்சிகளே இக் கட்டுரைகள். அரிய பல யோசனைகள் இவற்றில் அடங்கியுள்ளன.

—வல்லிக்கண்ணன்

○ ○

---

## சிந்தனைப் புதையல்கள்

—டாக்டர் நா. மகாலிங்கம்—
பக்கங்கள்: 260 விலை ரூ.35
அன்னம் பி. லிட்., சிவகங்கை-623560

---

வாழ்க்கை என்பது, மரணம், நோய், துயரம், இவைகளை எல்லாம் தாண்டி இவைகளுக்கப்பால்— காலத்தாலும் அழிக்க முடியாத ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். காலமும் மரணமும் அந்த வாழ்க்கையைத் தீண்டிவிட முடியாத அளவுக்கு இதில் ஏதோ ஒரு சக்தி இருக்கத்தான் வேண்டும். இந்த சக்திதான் ஆன்ம சக்தி.

ஆன்மீக ஞானப் பொக்கிஷங்களை முறையாகத் தெரிந்து கொண்டு, ஓர் அர்ப்பணிப்பு உணர்வோடு சகல ஜீவராசிகளுக்கும் உதவக் கூடிய ஒரு வாழ்வை வாழத்தான் நாம் இந்த உலகத்தைப் பயன்படுத்த

படிப்பகம்

www.padippakam.com



வேண்டும். இந்த எண்ணம் கொண்ட மக்கள் ஒரு சமுதாயத்தில் பெருகுவார்களேயானால் அந்த சமுதாயம் நிச்சயமாக ஓர் உன்னதமான சமுதாயமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இப்படி உறுதியாகச் சொல்கிறார் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம். தொழில் அதிபரான அவர் சீரிய சிந்தனையாளராகவும் செயலாற்றுகிறார். தனி மனிதனும், சமூகமும், நாடும் உயர்வு பெற்று உன்னத நிலை அடைவதற்குத் தேவையான யோசனைகள் அவரது சொற்பொழிவுகளிலும் எழுத்துக்களிலும் நிறைந்து காணப்படுகின்றன.

'ஞானம் என்றால் வெறும் அறிவு மட்டுமல்ல. அறிவின் தெளிவு என்று பொதுவாகச் சொல்லுவார்கள். ஆனால் ஆழமாகச் சிந்தித்தால், ஞானம் என்றால் அறிவை அறிந்த தெளிவு என்பதை உணரமுடியும்.'

'அறிவாளி என்பவன் எதனையும் அறிந்து வைத்திருப்பவன்; தனது முயற்சியால் அறிந்து கொண்டவன். அறிவாளி தனது அறிவின் காரணமாக பல்வேறு கருத்துக்களைப் பெற்று முடிவுக்கு வரமுடியாமல் சிந்தித்த வண்ணமாய் இருப்பான்.

ஆனால் ஞானி அப்படி அல்ல. அவருடைய அறிவு தெளிந்த அறிவு. பிறருக்கு உதவும் அறிவாகத்தான் அது அமையும்.'

இவ்விதம் சிந்தித்து தெளிவான விளக்கங்களைத் தரும் ஆற்றல் பெற்றிருக்கிறார் டாக்டர் மகாலிங்கம்.

அவருடைய அறிவுத் தெளிவும், ஞானமும், சிந்தனையும், வாழ்க்கையின் சகல துறைகளிலும் மண்டிக் கிடக்கிற இருளைப் போக்கி, உய்விக்கும் ஒளியை புகுத்தும் சக்தி உடையனவாகப் பிரகாசிக்கின்றன.

நாட்டில் சமுதாய மாற்றம் உருவாக வேண்டுமானால் என்னென்ன செய்யப்பட வேண்டும் என்று அவர் உள்ளம் ஓயாது எண்ணங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறது. அத்தகைய அரிய ஆலோசனைகள் இந்நூல் முழுவதிலும் ஆழ்ந்தும் பரந்தும் காணப்படுகின்றன. 'மக்கள் சக்தி' என்ற கட்டுரை மிக முக்கியமானது. அரசியல் வாதிகளும், சமூக சீர்திருத்தவாதிகளும், கல்வித் துறை ஆசிரியர்களும் கட்டாயம் அறிந்தாக வேண்டிய நல்ல யோசனைகள் அதில் அடங்கியுள்ளன. அவற்றை செயல்படுத்தக் கூடியவர்கள் தேவை.

அருட்செல்வர் வலியுறுத்துவது போல, 'தேசத்தை புனர் நிர்மானப்படுத்துகின்ற ஒரு புதிய இயக்கம் வேண்டும். இதற்கு மேடைப் பிரசங்கிகள் அவசியம் இல்லை. தியாக உணர்வும் சேவை மனப்பான்மையும் உள்ள வீர இளைஞர்களே தேவை.'

இவ்வாறான அரிய எண்ணங்களை வெளிப்படுத்தும் பதினைந்து கட்டுரைகளைக் கொண்டுள்ள இந்நூல் மதிப்பு மிகுந்த 'சிந்தனைப் புதையல்கள்' தான்.

—வல்லிக்கண்ணன்

படிப்பகம்

www.padippakam.com

## மூக்குத்திப் பூக்கள்

## முத்து வடுகு

★
இன்னும் சந்தேகமா...
எத்தனை ஆணிகள்
என் சவப்பெட்டியில்.

★
எப்பொழுதும்
கொடியிடை;
பசியால் அவள்.

★
பிய்ந்த நாற்காலியை
பின்னியிருக்கிறது
சிலந்தி.

★
அவள் தலையில் பூ
சூடிக்கொண்டது
யார்?

★
பாவம் புறாக்கள்;
கோபுரம் சிதைகிறது
குளத்தில்.

★
பழங்களைப் பறிக்காதீர்கள்.
நாள்தோறும் எண்ணுவோம்
கிளிகளை.

★
யாருக்குச்
சுதந்திரம்?
பிணத்தில் ஈக்கள்.

★
கூடு திரும்பின
பறவைகள்;
அவள் முகம் பார்த்து.

★
புதுப்பிக்காத வீடு,
அழகாய் இருக்கிறது
கிளிகளோடு.

★
கூரையைப் பிரி.
நிலவை மறைக்கிறது;
எண்ணெய்தான் இல்லையே.

★
முயற்சியில்
அலைகள்,
நிலவைக் கரை சேர்க்க.



★
அமாவாசைதான். இருந்தும்
சாப்பிடுகிறது குழந்தை
அவள் முகம் பார்த்து.

★
கருவறை தர
கல்லறை பெற
துடங்கள் வாழ்க்கை.

★
என்னிடமே பிச்சை.
என்ன செய்ய?
திருவோட்டைக் கொடுத்தேன்

★
அவளும் வருவாளோ என்னி
காகம் கரைகிறதே (டம்?
என் கல்லறையில்.

★
காற்றின்
சலங்கையா?
சருகுகள்.

படிப்பகம்

www.padippakam.com

# சிரிப்பு

மு. ராஜசேகரன்



ஹஹஹா.

இப்போது நான் செய்த 'ரிஸைன்மெண்டையும்' சேர்த்தால், இதுவரை நான் ரிஸைன் செய்த கம்பெனிகளின் மொத்த எண்ணிக்கை பதினெட்டு.

அப்புறமென்ன? நான் சிறுகச் சிறுக அழிந்து கொண்டிருக்கிறேனென்று அடுத்த வரி எழுத வேண்டும். ஆனால் அது அனர்த்தமானது. ஏனெனில், அதுதான் உங்களுக்கே தெரியுமே.

ஹ! எனக்கு மீண்டும் சிரிப்பு வருகிறது. ஆனால் இது என்ன வகைச் சிரிப்பு? அலட்சியம்? கிண்டல்? தெரியவில்லை. ஆனால், இந்த வகை புரியாத சிரிப்பு, யயராவது வீடு கட்டுவதுபற்றிப் பேசும் போதோ, அல்லது உணவில் சுவை விவகாரங்களை நுணுங்கி விமர்சிக்கும் போதோ, அல்லது உடற்பயிற்சி பற்றிச் சிரத்தையாகப் பேசும் போதோ, நான் அருகிலிருக்க நேர்ந்தால் கூட உடனே வந்துவிடுகிறது.

ஒருமுறை வெறும் மேலோடு கைகட்டி நின்று கொண்டிருந்த நண்பனொருவன், திடீரென தன் 'ஆர்ம்ஸ்' ஐயும், 'செஸ்டை'ஐயும் தலை கவிழ்த்துப் பார்த்துவிட்டு, ''ஒடம்பைத் தேத்தணும்யா; கொஞ்ச நாளு எக்ஸர்ஸைஸ் பண்ணாம...ஒடம்பே போச்சு'' என்றதும் எனக்கு வந்ததே சிரிப்பு! அவன் திகைத்து வியப்போடு 'திருதிரு' வென்று விழிக்குமளவுக்குச் சிரித்துவிட்டேன்.

அவன் கேட்டான்:

''என்னய்யா?''

ஹொவ்- ஹொவ்... ஒன்னுமில்லே.''

''யேர்வ்! என்னய்யா ஆச்சு ஒனக்கு? இதுக்குப்போய் ஏன் சிரிக்கறே?''

நான் ஒன்றையும் சொல்லவில்லை. சைக்கிளில் நின்றபடி தான் பேசிக் கொண்டிருந்தேனாதலால் உடனடியாய்ச் சிரித்துக் கொண்டே அங்கிருந்து ஓடி விட்டேன். ஆனால் நான் அப்படிச் செய்திருக்கக் கூடாது. அப்படிச் செய்ததால் அதற்குப் பிறகு அவனைப் போய் நான் பார்க்கவே இயலவில்லை. எந்த முகத்தோடு அவனைப் போய்ப் பார்க்க? ஆனால், பாவம் அவன். என்னைப்பற்றி நண்பர்களிடம் மிகவும் வருத்தத்தோடு விசாரித்திருக்கிறான்.

''என்னடா ஆச்சு நம்ம குண்டனுக்கு?'' என்றிருக்கிறான். பத்மநாபன்தான் இதை எனக்குச் சொன்னான். சொல்லிவிட்டு அவனும் என்னிடம்

படிப்பகம்

www.padippakam.com



கேட்டான். ஆனால் நான் ஒரு பதிலும் சொல்லவில்லை. என்னத்தைச் சொல்ல? எனக்கும் தான் தெரியாதே.

ஆனால் இந்த உலகம் ஏன் இப்படி இருக்கிறது? ஏன் பரஸ்பரம் அன்பில்லாமல் மனிதர்கள் இப்படி அகந்தையோடு அலைந்து கொண்டிருக்கிறார்கள்? ஏன் இவர்கள் ஒரு கண நேரமாவது நிதானித்து, 'நாம் செய்வது சரிதானா, பக்கத்து மனிதனுக்கு நாம் இடைஞ்சலாக இருக்கிறோமா?'' என்றாவது பார்க்கத் தவறுகிறார்கள்?

நான் ஒவ்வொரு இடத்திலும் வேலையை விடுவதற்கு இது தான் காரணமாயிருந்திருக்கிறது. நான் ஐ. டி. ஐ. முடித்திருக்கிறேன். நானொரு 'மெஷினிஸ்ட்'. கம்பெனி என்று போனால், 'ஒர்க்ஷாப்'பில் எனக்கு வேலை. என் வேலை ஒரு நாளைக்கு 10 பீஸ் ரெடி செய்வதென்றால், அதிலெல்லாம் நான் எந்தக் குறையும் வைப்பதில்லை. எனக்குக் கொடுக்கப்படுகிற வேலையைத் துல்யமாய்ச் செய்து முடிக்கிற சிரத்தையுள்ளவன் நான். அவர்கள் கேட்கிற 'ப்ரொடெக்ஷனை' நிச்சயம் நான் கொடுப்பேன்.

ஆனால், நான் என் வேலையை முடித்து விட்டுச் 'சும்மா' இருப்பது மாதிரி, அவர்கள், அவர்களின் வேலையை முடித்ததும் சும்மா இருக்கமாட்டார்கள். 'புறணி' பேசுவார்கள். நான் சேர்கிற வரைக்கும் எதுஎது பற்றியோ புறணி பேசினவர்கள், நான் சேர்ந்த பின்னால், உடனேயே என்னைப்பற்றிப் புறணி பேசத் தொடங்கிவிடுவார்கள். ஏனெனில், நான் யாரோடும் எது பற்றியுமே பேசுவதில்லை. வேலை நேரத்தில், அவ்வப்போது கிடைக்கும் ஓய்வு நேரங்களில் கூட யாருடனும் எதுவும் பேசுவதில்லை. 'டீடைமி'லும் 'லஞ்ச்டைமி'லும்கூட அப்படித்தான். பேச எதுவுமில்லை என்பது என் எண்ணம். ஆனால், அவர்களுக்கு அப்படியில்லை. குறைந்த பட்சம் செக்ஸ் பற்றியாவது பேசாவிட்டால் அது என் இளமைக்கு இழுக்கு என்பதால் உடனே அவர்களுக்குள் விசாரம் எழும்.

''இவன் ஏன் இப்படி இருக்கிறான்?''

ஏன் மனிதர்களுக்கு எப்போதும் ''இவன் ஏன் இப்படி இருக்கிறான்?'' என்கிற கேள்வியே எழுகிறது?

ஏன் ''நாம் ஏன் இப்படி இருக்கிறோம்?'' என்ற கேள்வி எழாமலேயே போய்விட்டது?

ஆனால், இது குறித்தெல்லாம் இப்போது நான் வருந்துவது இல்லை.

'புறமுகப் பார்வை'யும் 'அகமுகப் பார்வை'யும் இயற்கையாகவே மனிதனுக்கு வந்தமைவதாய் ஜேம்ஸ். டி. பேஜ் என்பவரின் ஒரு 'பிறழ்நிலை உளவியல்' நூலில் ஒருமுறை படித்ததோடு, ''சரிதான் போ. இதற்கெல்லாம் என்ன செய்ய? முடிந்தவரை அட்ஜஸ்ட் செய்து

படிப்பகம்

www.padippakam.com



போ'' என்றாகிவிட்டது. அதனால், இதற்காக நான் வருந்துவது நின்றுவிட்டது.

ஆனால், இவர்களையெல்லாம் மாற்றாமலேயே விட்டுவிட்டால் உலகம்? 'அப்பாவி மனித'னின் டாஸ்டாய்வ்ஸ்கி, கனிந்த மனித நேயத்தோடு எழுதின ஆன்ட்டன் செகாவ் 'அவன் விதி'யின் மிகயீல் ஷோலகோவ், காம்யு, தெரசா டால்ஸ்டாய், சாக்ரடீஸ், மார்க்ஸ், எங்கல்ஸ், புத்தர், ரஜனிஷ், ஜே. கே., ஜெயகாந்தன், பாலகுமாரன்,... இவர்கள்? இவர்களின் உழைப்புகள்? இவர்கள் பெற்ற துயரங்களின் அர்த்தங்கள்?

இப்படி இந்தக் கோணத்தில் விஷயத்தைப் பார்க்கும் போதுதான் வருத்தமும் தாளமுடியாத வேதனையும் நெஞ்சில் உண்டாகிறது. எப்படியும் உலகை மாற்றிவிட வேண்டும்; சொர்க்கமாக்கிவிட வேண்டும், என் புனிதமான அன்புக்கும், கண்ணீருக்கும், முத்தங்களுக்குமுரிய அத்தனை மனிதாபிமானிகளின் உழைப்பையும் அர்த்தமுள்ளதாக்கி விடவேண்டுமென்று எனக்குள் ஒரு மூர்க்கமான வேகம் பொங்கி பீறிட்டுப் பீய்ச்சியடிக்கிறது.

ஆனால், முடிய வேண்டுமே! எப்படி முடியும்? பொங்கிப்பீறிடுகிற அது கொஞ்ச நேரத்திலேயே கார்ப்பரேஷன் குழாயாய் சொட்டத் தொடங்கி விடுகிறதே! என்ன செய்யலாம்;

என் நோய் இதுதான்; பயங்கரமான அலுப்புணர்வு இருக்கிறது என்னிடம். இதுதான் என் நோய். அகற்ற ஏதேனும் மருந்திருக்கிறதா உங்களிடம்? விசாரித்துப் பாருங்கள். பக்கத்தில் கேட்டுப் பாருங்கள்.

வங்கத்தின் 'சீர்ஷேந்து முகோபாத்யாய'வின் 'கறையானி'ல் வந்த சியாமுக்கும்கூட இதே நோய்தான் கண்டிருந்தது. அவனும்கூட என் மாதிரியே வேலையை ரிசைன் செய்து



விட்டு பரதையாய்த்தான் திரிந்துகொண்டிருந்தான். ஆனால், அவன் ஒரு இஞ்சினியர். நானொரு மெஷினிஸ்ட். இதுதான் வித்தியாசம்.

இன்னுமொரு வித்தியாசம் கூட உண்டு. அவன் உலக மீட்சி பற்றியெல்லாம் கவலைப் படவில்லை. சாதாரண மனிதனாகத்தான் இருந்தான். ஆனால், வாழ்க்கை பற்றின ஞானம் உண்டு.

ஒரு சமயம் எனது ஆரம்ப ஆன்மிக விசார கால கட்டம் போல, அவனும் ''நான் ஏன் மனிதனாய் பிறந்திருக்கிறேன்? நான் ஏன் ஒரு மரமாகவோ, மீனாகவோ பிறக்காமல் போனேன்?'' என்றுகூடக் கேட்டுக் கொண்டு திரிந்தான்.

ஓ! இன்னொரு அற்புதமான விஷயம்கூட உண்டு. 'சோரன் கிர்க்கேகார்டு' போல அவனுக்

படிப்பகம்

www.padippakam.com



கும் ஒரு சமயம் தனி மனிதத் தனம் பற்றிக் கேள்வி எழுந்ததும் யோசித்து யோசித்து ஓர் அற்புதமான தீர்மானத்துக்கு வந்திருந்தான்.

அவன் சொன்னான்:

''தனி மனிதன் என்பவன், பிய்த்துக் கொண்டு பறக்கிற மோட்டார் சைக்கிள் ஓட்டுநரைப் போல. உலகத்தோடு சம்பந்தமற்றவன்.''

ஹஃஹா! நன்றாக இல்லை?

அட! வித்தியாசம் பற்றிச் சொல்ல வந்தது இவ்வளவு தூரம் இழுத்து விட்டது, இல்லை? ஆனால், இது நமக்கு முக்கியமில்லை. சும்மா 'பாக்ஸ் மேட்டர்' மாதிரிதான் சொன்னேன்.

நமக்கு முக்கியமானது என் நோயின் தன்மைதான். அது பற்றி விளக்கினால்தானே நீங்கள் எங்காவது போய் மருந்து பற்றி விசாரிக்க முடியும்?

எனக்கும் எல்லாம் தெரிகிறதுதான். ஆனால் இப்போது தான் சிரிக்கத் தொடங்கிவிட்டேனே! அப்படியானால் என் நிலைமை என்னவென்றுதான் உங்களுக்கே தெரியுமே. ஹ்ஹ. அதுதான் சும்மா வழவழா... கொழகொழா...

எனக்கு எப்படி சக ஊழியர்களின் 'நொய்நொய்'த்தனம் வெறுப்பேற்றியதோ, அப்படியே சியாமுக்கு அவன் மேனேஜரின் 'நொய் நொய்.' ஒரு நாள் ரிஸைன் லெட்டர் கொடுத்து விட்டு வந்துவிட்டான். பிறகு இரண்டு மூன்று கம்பெனிகளுக்கு முயன்றான். அவர்களோ ஆரம்பத்திலேயே 'நொய் நொய்'க்க ஆரம்பித்தார்கள். பிறகு சலிப்போடு சில நாட்கள் வீட்டிலிருந்தான். அப்போது மெல்ல மெல்ல அவனுக்கும் இந் நோய் தோன்றி வலுக்கத் தொடங்கிற்று. அவனுக்கே இது தெரியாது.

பிறகொரு நாள்தான் வேறொரு கம்பெனிக்கு இன்ட்டர்வியூவுக்குப் போயிருக்கும்போது அவனுக்கிது தெரிய வந்தது. அவன் கதவு நோக்கிப்போனால் கதவுபாட்டுக்கு வலப்பக்கம் போய்க்கொண்டிருந்தது. 'அட! என்னடா இது!' என்று திரும்பி வந்தால், அந்தக் கதவு இடப் பக்கமாய்ப் போகத் தொடங்கியது. அவ்வளவுதான். அதுதான் கடைசிக் கம்பெனி. அதற்குப் பிறகு எங்குமே முயலாமல் கையிலிருந்த சொற்பக் காசையும் செலவழித்துக் கொண்டு, எதிர்காலம் பற்றிய மெல்லிய கலக்கத்தோடும் ஆதாரமற்ற கனவுகளோடும் திரியத் தொடங்கினான்.

இந்த நோயின் கொடிய தன்மை என்னவென்றால், எங்களது உழையாமையால்— முயலாமையால் எதிர்காலத்தில் வரப்போகும் கேடு பற்றி எங்களுக்கு நன்றாகவே தெரியும். எதுவோ ஒன்று வந்து எங்களை தூக்கிவிடப் போதாகக் கனவு காண்போம்.

ஆனால், அது கடைசி வரைக்கும் வராமலே போவதையும், 'வரும்' என்ற நம்பிக்கையிலேயே சதுப்புக் குழியில் அமிழ்வது போல் அழிவுக்குள் நாங்கள் 'இஞ்ச் பை இஞ்ச்'சாக அமிழ்ந்து கொண்டே இருப்பதையும் கடை சி வரைக்கும், கண்களும் சதுப்புக்குள் மூழ்குகிற வரைக்கும் பார்த்துக் கொண்டே இருந்துவிட்டு, அப்புறம் சாவோம்.

படிப்பகம்

www.padippakam.com



மரணம் எளியது. மிகச் சுலபமாக நம்மால் அரவணைக்கக் கூடியது. ஆனால், நாங்கள் அப்படியும் அரவணைக்க முடிவதில்லை. ஏனெனில், எங்களுக்குள் நம்பிக்கையின் சுடர் அணைவதே இல்லை. அது சுடர்ந்துகொண்டே இருக்கும்.

'சரி. கடைசி வரை வாழத்தானே போகிறோம். ஏதாவதொரு வழியில் முயல்வோம்' என்று காரியத்திலிறங்கவும் முடியாது. ஏனெனில் எங்களுக்குள் நம்பிக்கை காட்டுத் தீ போல் பரவி எரிவதுமில்லை... சுடராகத்தான்... சின்னஞ்சிறு சுடராகத்தான்...



சாகவும் விடாமல், உழைத்துப் பயன் பெறவும் விடாமல் இந்த நோய்...

ஹஃஹா! முரணும் குழப்பமுமான இதெல்லாம் பார்த்தால், உங்களுக்கே சிரிப்பு வரவில்லை? வருகிறதுதானே? அது மாதிரிதான் எங்களுக்கும்.

வங்கத்தில் ஆண் குழந்தைக்குப் பாடுகிற தாலாட்டுப் பாடலில் இப்படியொரு பத்தி வருகிறது:

''அம்மாவுக்கு வாங்கித் தந்தேன்
ரெட்டைச் சங்கு வளையல்;
தம்பிக்குச் செஞ்சு வெச்சேன்
கல்யாணம்;
அப்பாவுக்குக் கொடுத்தேன்
தங்க மகுடம்—
தீர்த்தயாத்திரை போகட்டும்.''

அன்றொரு நாள் மாலை நேரத்தில் கல்கத்தாவில் எல்லாக் காசும் கரைந்த நிலையில் சியாம் அப்படியே போய்க் கொண்டிருந்திருக்கிறான்.

தான் சம்பாதிக்காமலிருந்து கொண்டு, தத்துவ விசாரம் செய்து கொண்டு, பரதைபோலச் சுற்றித் திரிவதைப்பற்றியும், தன் வயதான பெற்றோரும் குடும்பமும் எண்ணெயற்ற அரிக்கேன் விளக்கும், அரை வ்யிற்றுப் பட்டினியுமாய் தனது வங்கக் கிராமத்தில் இருப்பது பற்றியும் நினைத்துக் கொண்டே போய்க் கொண்டிருந்திருக்கிறான்.

திடீரென சூரிய அஸ்தமனம் கண்ணில் பட்டிருக்கிறது. வாக்கிங் நிறுத்தி, சிவந்து மங்கிய சூரியனையே கடைசி வரை பார்த்துக் கொண்டிருந்திருக்கிறான். சூரியனின் கடைசி விளிம்பாம். அதுவும் அமிழ்ந்து கொண்டிருந்ததாம்.

அப்போது சியாமின் நெஞ்சுக்குள் ஒரு குரலாம்:
''அவ்வளவுதான். சியாமும் முடிந்துவிட்டான்.''

உடனே அவனின் நினைவுத் தொகுதிக்குள்ளிருந்த மேற்கண்ட வங்கப் பாடலின் வரிகள் மேலெழும்பி வந்திருக்கின்றன. அவ்வளவுதானாம். சியாம் சிரித்து விட்டானாம்.

பாவம் நிலைமை அந்த அளவுக்குப் போன பிறகு எப்படி அந்தச் சிரிப்பை அடக்க முடியும்? ○

படிப்பகம்

www.padippakam.com

உருவகம்

## 'தன்னில்'

**என். ஆர். தாசன்**

முச்சந்தியில் கிடந்த வாழைப் பழத் தோலை
எடுத்து ஓரத்தில் போட அவன் குனிந்தான்.
எதிரில் வந்த இளைஞன் கேட்டான்:
"ஏன் இந்த வீண் வேலை?
எதற்காக இதைச் செய்கிறீர்கள்?"
அவன் சொன்னான்:
"யாரேனும் மிதித்தால் வழுக்கி விழுந்து
விடலாம் அல்லவா?"
இளைஞன் கேட்டான்:
"அதைப் பற்றி உங்களுக்கு என்ன கவலை?"
அவன் சொன்னான்:
"நான் மிதித்தாலும் விழுந்து விடலாம்,
இல்லையா?"
இளைஞன் முகத்தில் அலட்சியம் வெளிப்பட்டது.
அவன் யோசித்தான்.
காரணம் புதிய பரிமாணம் பெற்றது.
அவன் கேட்டான்:
"கவனக் குறைவாக நீங்கள் மிதித்தாலும்
விழுந்து விடலாம், இல்லையா?"
இளைஞனின் முகம் மலராய் மாறியது.
உற்சாகத்துடன் சொன்னான்:
"நீங்கள் நல்ல காரியம்தான் செய்கிறீர்கள்."

படிப்பகம்

www.padippakam.com

Kavithaasaran, Feb. 1993. Regd. No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY in TAMIL R. Dis. 5479/90

# ADVERTISEENT TARIFF

| | | |
|---|---|---|
| Back Cover (Black & White) | Rs. | 1250/- |
| Cover inside I & II each | ,, | 1000/- |
| Full Print Page | ,, | 750/- |
| Half Page | ,, | 400/- |

Add 50 % for each additional colour upto 3 colours.

## MECHANICAL DATA

| | |
|---|---|
| Overall Size of the Monthly: | 21.5 cmX 14 cm |
| Print Area: | 17.5 cm X 10.5 cm |
| Printing Process: | Letter Press |
| Material preferred: | Matter to be composed & Blocks |

Your Advertisement in our Monthly is
one step forward to help spread
Creative Literature in good harmony.

சந்தாதாரர் ஆகுங்கள்
சந்தாதாரர் ஆக்குங்கள்

படிப்பகம்